பக்கங்கள்: 15 விலை : 30/-

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 05 வள்ளுவர் ஆண்டு 2052 புரட்டாதி 16 சனிக்கிழமை 02.10.2021 கதிர் 331

### இனிது ரகசியம் அல்ல!

என் செய்தியாளர் ஒரு செய்தி கொண்டு வந்தார். அதை வாசித்ததும் ‘போக்கிரி’ படத்தில் வடிவேலுவின் கொமடிதான் என் நினைவுக்கு வந்தது.

அந்தப் படத்தில் ஒரு கோமாளி போல நடிக்கும் வடிவேலுக்குப் பெயர் ஷங்கி மங்கி பக்கம்02

# ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச்சலுகையை வழங்க முன் மனித உரிமையைச் சுட்டெண்ணை ஆராயுங்கள்

## ஐரோப்பிய ஒன்றியத்திடம் வடக்கு, கிழக்கு சிவில் அமைப்புகள் கூட்டாக வேண்டுகோள்

இலங்கைக்கு ஐரோப்பிய ஒன்றியம் ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச்சலுகையை வழங்க முன் நாட்டின் மனித உரிமையைச் சுட்டெண்ணை ஆராய வேண்டும் என்று வடக்கு, கிழக்கு சிவில் அமைப்புகளின் பிரதிநிதிகள் கூட்டாக வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

யாழ்.ஊடக அமையத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அத்தகைய வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

ஐரோப்பிய ஒன்றியத்தால் ஒரு நாட்டுக்கு ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச்சலுகையை வழங்குவதற்கு முன் அதில் குறிப்பிடப்பட்டுள்ள 27 நிபந்தனைகளுக்கு அந்த நாட்டு அரசு இணக்கம் தெரிவிக்க வேண்டும்.

இலங்கை அரசானது போர் நடைபெற்று 10 வருடங்கள் கடந்த நிலையில் காணாமல் ஆக்கப்படுதல், அரசியல் கைதிகள் விவகாரம், காணி அபகரிப்பு, பயங்கரவாத தடைச் சட்டத்தின் மூலமான கைது நடவடிக்கைகள் என்பன தொடர்ந்த வண்ணமே உள்ளது. 15




# நாளை யாழ்ப்பாணம் வருகின்றார் இந்திய வெளிவிவகார செயலாளர்

## ஆளுநர், அரசியல்வாதிகளுடன் முக்கிய பேச்சு

(ந.லோகதயாளன்)

இலங்கை வரும் இந்திய வெளிவிவகார அமைச்சின் செயலாளர் ஹர்ஷ் வர்தன் ஷ்ரிங்லா யாழ்ப்பாணத்துக்கும் வருகை தரவுள்ளார்.

நான்கு நாள் உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டு இன்று இலங்கை வரும் இந்திய வெளிவிவகார அமைச்சின் செயலாளர் நாளை மாலை 3 மணியளவில் யாழ்ப்பாணம் வருகின்றார். 2




## மேலும் 58 பேர் சாவு!

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றால் மேலும் 58 பேர் சாவடைந்துள்ளனர் என்று அரச தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அதன்படி நாட்டில் பதிவான கொரோனா சாவுகளின் மொத்த எண்ணிக்கை 2

## பட்டா - மோட்டா சைக்கிள் விபத்தில் ஒருவர் மரணம்

### மிருசுவிலில் நேற்று மாலை சம்பவம்



யாழ்., தென்மராட்சிப் பகுதியில் இடம்பெற்ற வாகன விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளமையுடன், இன்னுமொருவர் படுகாயமடைந்துள்ளார்.

கிளிநொச்சி, அம்பாள்புரத்தைச் சேர்ந்த அ. சுரேஷ்குமார் (வயது 40) என்பவரே உயிரிழந்துள்ளார்.

மிருசுவில் பகுதியில் நேற்று மாலை இடம்பெற்ற குறித்த விபத்து சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது, 2

## நேற்று தொற்று 893

இலங்கையில் நேற்று 893 பேர் கொரோனா வைரஸ் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று அரச தகவல் திணைக்களம் அறிவித்துள்ளது.

அதன்படி நாட்டில் கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டவர்களின் மொத்த 2

## கிளிநொச்சியில் மரணித்த மூதாட்டிக்குக் கொரோனா!

கிளிநொச்சியில் உயிரிழந்த வயோதிபப் பெண் ஒருவருக்குக் கொரோனாத் தொற்று உறுதி செய் யப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலையில் 72 வயதுடைய மூதாட்டி உயிரிழந்துள்ளார்.

அவருடைய பி.சி.ஆர். மாதிரிகள் நேற்று யாழ்.போதனா வைத்தியசாலை ஆய்வுகூடத்தில் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டிருந்தன. அதன்போதே அவருக்குக் கொரோனாத் தொற்றுள்ளமை உறுதிசெய்யப்பட்டுள்ளது.

## சுகாதார விதிகள் முறையாக பின்பற்றப்படுகின்றனவா?

### கண்காணிக்குமாறு அறிவுறுத்து

இலங்கையில் ஊரடங்கு தளர்த்தப்பட்டுள்ள நிலையில் நாட்டில் உரிய சுகாதார வழிகாட்டுதல்கள் பின்பற்றப்படுகின்றனவா எனத் தீவிரமாக ஆராயும்படி, கொவிட் ஒழிப்புச் செயலணி அந்தந்தத் துறையினரை 2



## 5 மாவட்டங்களுக்கு மண்சரிவு அபாயம்

நாட்டில் நிலவும் மழையுடன் கூடிய வானிலை காரணமாக 05 மாவட்டங்களின் சில பிரதேச செயலக பிரிவுகளுக்கு மண்சரிவு அபாய முன்னெச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது எனத் தேசிய கட்டட ஆய்வு நிறுவகம் தெரிவித்துள்ளது. 15

## காணாமல் ஆக்கப்பட்ட தமிழர்களில் சிலர் பௌத்த பிக்குகளாக மாற்றம்



### தமிழர் தாயக காணாமல் ஆக்கப்பட்டோர் சங்கத்தின் செயலாளர் தெரிவிப்பு

(வவுனியா நிருபர்)

காணாமல் ஆக்கப்பட்ட தமிழர்களில் பெரும்பாலானோர் உயிருடன் இருப்பதாக நாங்கள் அறிகின்றோம். அவர்களில் சிலர் கடத்தப்பட்டு, பல நாடுகளுக்கு அனுப்பப்பட்டனர். அவர்களில் சிலர் 2

## மதுபோதையில் மோட்டார் சைக்கிளில் பயணித்தவருக்கு ரூ. 1,25,500 தண்டம்!

### யாழ்.நீதிமன்ற நீதிவான் உத்தரவு

(எஸ்.நிதர்ஷன்)

மதுபோதையில் போக்குவரத்து விதிமுறைகளை மீறி மோட்டார் சைக்கிளில் பயணித்தவருக்கு ஒரு இலட்சத்து 25 ஆயிரத்து 500 ரூபா தண்டம் விதித்து யாழ்ப்பாணம் நீதிமன்ற நீதிவான் நளினி சுதாகரன் உத்தரவிட்டார்.

யாழ்., கொழும்புத்துறையைச் சேர்ந்தவர் நேற்று நீதிவான் நீதிமன்றில் 2

## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
என்று நினைவு.

அவருக்கு சிறுநீர்ப்பை நிரம்பி விட்டது. "அம்மா... அடக்க முடியல்லையே, அடக்க முடியல்லையே" என்று தனக்குள்ளேயே முனகிக் கொண்டு ஆளில்லா வீதியோரத்தில் ஒதுங்க முயலுவார் ஷங்கி மங்கி.

அந்த நேரம் பார்த்து சைக்கிள் பெல் சத்தம் கேட்கும்.

ஒண்டுக்குப்போக முடியாமல் – ஒதுங்க முடியாமல் – தடுமாறும் ஷங்கி மங்கி, "அதுக்குள்ள யாரு?" – என்று சீறுவார்.

தன்னைத் தாண்டி பெல் அடித்தபடி சைக்கிளில் செல்லும் நபரைப் பார்த்து "ஆக்களே இல்லை... அதுக்குள்ள பெல்லு...!" – என்று திட்டுவார்.

"அதுதான் நீ இருக்கிறியே...!" – என்று சைக்கிளில் பெல் அடித்தபடி தாண்டிச் செல்பவர் துடுக்காகப் பதில் சொல்லுவார்.

"அதுதான் நான் ஓரமாகத்தானே நிக்கிறேன். கொக்கா மங்கா...!" – என்று வாயடிப்பார் வடிவேல்.

சரி. இனி விடயத்துக்கு வருவோம். ஆள் இல்லா வீதியில் பெல் அடித்த கதை மாதிரி தேவையில்லா விடயத்துக்கு மூன்று லட்சத்து இருபதாயிரம் ரூபாவை வீணாகச் செலவிட்ட யாழ் மாநகர சபை பற்றிய செய்திதான் அது.

கடந்த ஓகஸ்ட் 13ஆம் திகதி நல்லூர்க் கொடியேற்றம். அது நடப்பதற்கு ஒரு வாரத்துக்கு முன்னரே மட்டுப்படுத்தப்பட்ட பக்தர்களுடன் – கடும் கட்டுப்பாட்டுடன் தான் – திருவிழா நடக்கும் என்பது எல்லோருக்கும் தெரியும்.

ஆலயத்துக்குள் உபயகாரர்கள் உட்பட நூறு பேர் மட்டுமே அனுமதிக்கப்படுவர். சுவாமி வெளிவீதி உலா ஏதும் நடைபெறாது. பக்தர்கள் வெளி வீதியிலும் கூட அனுமதிக்கப்பட மாட்டார்கள். தடை செய்யப்பட்ட வீதிப் பகுதியில் வசிப்பவர்கள் மட்டுமே அனுமதிக்கப்படுவார்கள் என்பவையும் நேரத்துடனேயே அறிவிக்கப்பட்டு விட்டன.

ஆனால் வழமையாக முழு பக்தர்களின் பங்குபற்றலுடன் திருவிழா நடைபெறும் போது ஆலய சுற்றாடல் வீதியில் இடம்பெறும் அசம்பாவிதங்களைக் கண்காணிப்பதற்காக வீதிகளில் சி.சி.ரி.வி. கமரா மாநகர சபையால் பூட்டப்படும். இதற்கான வாடகை மாநகர சபையால் செலுத்தப்படுவது வழமை.

இம்முறை பக்தர்களுக்கும் இடமில்லை, வெளி வீதியிலும் பக்தர்கள் நடமாட்டத்துக்கு அனுமதி இல்லை என்று அறிவித்து பொலிஸ் பாதுகாப்பும் போடப்பட்டு விட்டது. ஒரு வாரத்துக்கு முன்னரே இந்த நடைமுறை என்பது ஓரளவுக்கு உறுதியாகி விட்டது.

ஆனால் 13ஆம் திகதி கொடியேற்றத்துக்கு மூன்று நாள்கள் முன்னர் – சரியாக 10ஆம் திகதியன்று – சி.சி.ரி.வி. கமராக்கள் பொருத்துவதற்கான ஒப்பந்தம் ஒன்றை யாழ் மாநகர சபை ஒரு தரப்புடன் செய்கின்றது. 11ஆம் திகதியும், 12ஆம் திகதியும் கமராக்கள் வெளி வீதியில் பொருத்தப்படுகின்றன. திருவிழா முடிய அவை கழற்றி எடுத்துச் செல்லப்படுகின்றன. அதற்கான வாடகைக் கட்டணமே மூன்று லட்சத்துக்கு இருபதாயிரம் ரூபா மாநகர சபையால் செலுத்தப்பட்டிருக்கின்றது.

"ஆள் இல்லாத வீதியில் பெல் எதற்கு?" – என்று சீறும் வடிவேலு போல, ஆள்களே வராத திருவிழாவைக் கண்காணிக்க இவ்வளவு செலவில் சி.சி.ரி.வி. கமராக்களா என்று கேட்கும் நிலையில் மாநகர சபை வரியிறுப்பாளர்கள்.

ஒப்பந்தங்கள் நடந்தால்தானே கை அரிப்புக்கும் மருந்து கிடைக்கும்...? திருவிழாவை அடக்கி வாசிப்பது என்று முடிவானாலும் வாங்குவதை வாங்கத்தானே வேண்டும்...! எல்லாம் Money பிரச்சினை தான்... நான் மணிப் பிரச்சினை என்று சொல்லவில்லை....!

★ ★ ★

'சும்மா கிடந்த சங்கை ஊதிக் கெடுத்தானாம் ஆண்டி' என்பார்கள். அப்படி அலப்பறையாகியிருக்கின்றது அமுல்பேபியின் திருவிழா ஒன்று.

வீட்டுத்திட்டப் பயனாளிகள் விடயத்தில் அவரின் ஆதரவுக் கும்பல் நடத்திய திருவிளையாடலும், அது பற்றிய விவரங்களும் வாசகர்களுக்கு நன்கு தெரிந்தவைதான்.

அரச உதவி பெறும் வீட்டுத் திட்டப் பயனாளிகளின் பட்டியலில் அமுல்பேபியின் அந்தரங்க அணி தலையிட்டு தன் ஆதரவுக் கும்பலின் பெயர்களை நுழைத்தமை தான் சிக்கல்.

அதனால் முதலில் வெளியான பட்டியல் நிறுத்தப்பட்டது. விசாரணை, மீள் விசாரணைகளின் பின்னர் புதிய பட்டியல் வெளியானது. இருபது வீதமான பயனாளிகள் பெயர்கள் வெட்டப்பட்டு புதிய பெயர்கள் சேர்க்கப்பட்டன. அதிக தலையீடும் குளறுபடியும் சாவகச்சேரி பிரதேச சபையில்தான் என்பதும் வாசகர்கள் தெரிந்த விடயம்தான்.

சாவகச்சேரியில் தமது தரப்பு கையளித்த மூலப்பட்டியல்தான் சரியானது என அடம்பிடித்தது அமுல்பேபி அண்ட் கோ. அத்தரப்பின் கோரிக்கைக்கு அமைய மூன்று உயரதிகாரிகள் கொண்ட குழு ஒன்றை விசாரணைக்கு நியமித்தார் அரச அதிபர். அக்குழு நேற்றும், முன்தினமும் சாவகச்சேரி பிரதேச செயலகப் பிரிவில் நேரடியாகக் களம் இறங்கியது. ஒவ்வொரு பயனாளி வீட்டுக்கும் தேடிச் சென்று விசாரணைகளை நடத்தத் தொடங்கியுள்ளது. மீள் விசாரணையின் பின் தயாரான பட்டியலிலும் கூட, உதவி பெறுவதற்குத் தகுதியற்றவர்கள் பெயர்கள் நீக்கப்படாமல், அவை நீடிக்கப்பட்டிருப்பதும், தகுதியுள்ள பலர் நீக்கப்பட்டிருப்பதும் கண்டறியப்பட்டிருப்பதாகத் தெரிய வருகின்றது.

இதுவரை மூன்றில் ஒரு பகுதியினரின் வீடுகளுக்கு – சுமார் எழுபது பேரின் வீடுகளுக்கு – நேரடி 'விசிட்' முடிந்து விட்டது. விரைவில் இந்த உயர்குழு தனது பரிந்துரைகளை அரச அதிபரிடம் சமர்ப்பிக்கும் என்று தெரிகின்றது.

தேவையில்லாமல் மீள்முறையீட்டுக்குப் போய் 'சும்மா இருந்ததைக் கெடுத்த நொள்ளைக் கண்ணன் நிலைக்கு' ஆளாகப் போகின்றது அமுல்பேபியின் தரப்பு...!

இன்னும் விடயங்கள் உள்ளன. பிறகு ஒரு நாள் பார்ப்போம்...!

– மின்னல் –

## நேற்று தொற்று...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
எண்ணிக்கை 5 இலட்சத்து 18 ஆயிரத்து 775 ஆக எகிறியுள்ளது.

அத்துடன் கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்ட மேலும் 597 பேர் நேற்று குணமடைந்துள்ளனர்.

அதற்கமைய நாட்டில் கொரோனாத் தொற்றிலிருந்து குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 4 இலட்சத்து 58 ஆயிரத்து 85 ஆக அதிகரித்துள்ளது என்று அரச தகவல் திணைக்களம் மேலும் தெரிவித்துள்ளது.

## சுகாதார விதிகள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
வலியுறுத்தியுள்ளது.

நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ தலைமையில் நேற்று நடைபெற்ற கொரோனா ஒழிப்புச் செயலணிக் கூட்டத்தின்போதே, இந்த விடயம் வலியுறுத்தப்பட்டுள்ளது.

பொதுமக்கள் ஒன்றுகூடுவதால் மீண்டும் கொரோனாத் தொற்றுப் பரவல் ஏற்படுவதற்கான வாய்ப்புகள் அதிகம் எனவே சுகாதார வழிகாட்டுதல்கள் தொடர்பில் அவதானம் செலுத்துவது கட்டாயமென்று செயலணி அறிவித்துள்ளது.

தற்போது வெளியிடப்பட்டுள்ள சுற்று நிருபத்துக்கமைய, அரச மற்றும் தனியார் துறையினரைப் பணிக்கு அழைப்பது மற்றும் போக்குவரத்து சேவைகளில் சுகாதார வழிகாட்டுதல்களைப் பின்பற்றப்பட வேண்டியதன் அவசியம் குறித்தும் இதன்போது அறிவுறுத்தப்பட்டது.

சுற்றுலா மற்றும் பொருளாதாரத் துறைகளின் மேம்பாட்டுக்காக முன்னெடுக்கப்பட வேண்டிய சுகாதார வழிகாட்டுதல்கள் தொடர்பிலும் இந்தக் கூட்டத்தின்போது விரிவாகக் கலந்துரையாடப்பட்டது.

தொற்றுப் பரவல் நிலைமையைக் கட்டுப்படுத்தி வாழ்க்கை முறையைத் தொடர்வதற்காக, சுகாதாரத்துறை நிபுணர்களின் ஆலோசனைகளை ஊடகங்கள் வாயிலாகப் பொதுமக்களிடம் தொடர்ந்து கொண்டு செல்லவும் இதன்போது தீர்மானிக்கப்பட்டது.

அதனிடையே, தடுப்பூசி போட்டுக் கொண்டவர்கள் தொடர்பான விரிவான கணக்கெடுப்பொன்றை நடத்துவதற்கும், குறித்த கூட்டத்தில் கொரோனாத் ஒழிப்புச் செயலணி தீர்மானித்தது.

## பட்டா - மோட்டா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
பட்டா வாகனத்தை மோட்டார் சைக்கிள் முந்திச் செல்ல முற்பட்டபோது விபத்து ஏற்பட்டது.

உயிரிழந்தவரின் சடலம் பிரேத பரிசோதனைக்காக வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

அதேவேளை, இந்த விபத்தில் படுகாயமடைந்த நபர் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

விபத்து தொடர்பில் கொடிகாமம் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

## நாளை யாழ்ப்பாணம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
கொழும்பிலிருந்து ஹெலி மூலம் யாழ்ப்பாணம் வரும் அவர் மாலை 6.30 மணிவரை தங்கியிருந்து பல்வேறு தரப்பினரையும் சந்தித்து முக்கிய பேச்சுக்களில் ஈடுபடவுள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

வடக்கு மாகாண ஆளுநர், உள்ளூர் அரசியல்வாதிகள் எனப் பலரையும் அவர் சந்திக்கவுள்ளார்.

இந்தச் சந்திப்புக்களின் இறுதியில் யாழ்ப்பாணத்தில் இந்திய அரசின் நிதியில் கட்டி முடிக்கப்பட்டு இதுவரை திறக்கப்படாமல் இருக்கும் கலாசார நிலையத்தையும் அவர் பார்வையிட்டு அது தொடர்பிலும் ஆராயவுள்ளார் எனக் கூறப்படுகின்றது.

## மேலும் 58 பேர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
12 ஆயிரத்து 964 ஆக அதிகரித்துள்ளது.

நேற்றுமுன்தினம் உயிரிழந்த 58 பேரில் 27 ஆண்களும், 31 பெண்களும் உள்ளடங்குகின்றனர்.

இதில் 9 ஆண்கள், பெண்கள் ஒருவர் என 10 பேர் 30 - 59 வயதுக்கு இடைப்பட்டவர்களாவர். 48 பேர் 60 வயதுக்கு மேற்பட்டவர்களாவர். இதில் 18 ஆண்களும், 30 பெண்களும் அடங்குகின்றனர்.

## காணாமல் ஆக்கப்பட்ட...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
இராணுவ முகாம்களில் பணியாற்றுகின்றனர். அவர்களில் சிலர் பௌத்த பிக்குகளாகவும், சிலர் சிங்களவர்களாகவும் மாற்றப்பட்டுள்ளனர்.

– இவ்வாறு தமிழர் தாயக காணாமல் ஆக்கப்பட்டோர் சங்கத்தின் செயலாளர் கோ.ராஜ்குமார் தெரிவித்தார்.

வவுனியாவில் 1688 ஆவது நாளாகப் போராட்டத்தில் ஈடுபட்டு வரும் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் சர்வதேச சிறுவர் தினத்தை முன்னிட்டு நேற்று ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்த போதே மேற்கண்டவாறு கூறினர்.

இதன்போது அவர்கள் மேலும் தெரிவித்ததாவது:–

ஒற்றுமை என்பது வெறும் பேச்சு மட்டுமல்ல. ஒருங்கிணைந்த கொள்கையுடன் இணைவது. பாதிக்கப்பட்டவர்களுக்கு அங்கஜனின் முதல் மருந்தை நாம் எதிர்க்கின்றோம். இன்று 1688 ஆவது நாளாக காணாமல் ஆக்கப்பட்ட பிள்ளைகளைக் கண்டுபிடிப்பதற்கான எமது போராட்டம் தொடர்கின்றது. இந்த சர்வதேச குழந்தைகள் தினத்தன்று, இரண்டு முக்கியமான செய்திகளை நாம் தமிழர்களுக்கு எடுத்து இயம்ப விரும்புகின்றோம்.

காணாமல் ஆக்கப்பட்ட தமிழ்க் குழந்தைகளின் தாய்மார்களான நாங்கள் தமிழர்களிடமிருந்து, குறிப்பாக தமிழ் அரசியல்வாதிகளிடமிருந்து ஒரு ஒருங்கிணைந்த தீர்மானத்தை விரும்புகின்றோம். யூதர்கள் பெரும்பாலானோர் தம்மிடையே பல வேறுபாடுகள் இருந்தாலும்கூட, தம் குறிக்கோளில் ஒன்றிணைந்தனர். இதன் விளைவாகத்தான் இன்று இஸ்ரேல் என்று ஒரு நாடு உள்ளது.

அதேபோல் பின்வரும் தீர்மானத்துடன் நாம் இலக்கை அடைய வேண்டும். தமிழர்களின் அரசியல் எதிர்காலத்தை தீர்மானிக்கும் ஐ.நா. கண்காணிப்புடன் பொது வாக்கெடுப்பு, பாதிக்கப்பட்ட தமிழ் இனத்தவர்களுக்கு நீதி மற்றும் பொறுப்புக்கூறலுக்கான சர்வதேச விசாரணை, தமிழர்களுக்கான அரசியல் தீர்வு – ஒரு பாதுகாப்பான மற்றும் பாதுகாக்கப்பட்ட – மீளப்பெறப்பட முடியாத தமிழ்த் தாயகத்தை அடிப்படையாகக் கொண்டது, காணாமல் ஆக்கப்பட்ட பிள்ளைகளைக் கண்டுபிடிக்க அமெரிக்க மற்றும் ஐரோப்பிய ஒன்றிய தடயவியல் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துதல், அரசியல் தீர்வு பற்றி இலங்கை அரசுடன் பேசமாட்டோம் என்று வாக்குறுதி அளிக்கவும் ஏனென்றால் நாம் இன்னும் 74 வருடங்கள் ஏமாறக்கூடாது, தமிழர்கள் மற்றும் சிங்களவர்களுக்கு இடையே மத்தியஸ்தம் செய்ய அமெரிக்கா – ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் இந்தியாவை மத்தியஸ்தர்களாக நாம் பயன்படுத்த வேண்டும். மேற்கண்ட கொள்கைகளை யாரும் மீறக்கூடாது.

போரில் பாதிக்கப்பட்ட நாங்கள் இந்தத் தீர்மானத்தைத் தயாரிக்க விரும்புகிறோம். இதில் தமிழ் அரசியல்வாதி மற்றும் சிவில் குடிமக்கள், குழுக்களிடமிருந்து கையொப்பங்களைச் சேகரிக்க விரும்புகின்றோம்.

காணாமல் ஆக்கப்பட்ட தமிழர்களில் பெரும்பாலானோர் உயிருடன் இருப்பதாக நாங்கள் அறிகின்றோம். அவர்களில் சிலர் கடத்தப்பட்டு, பல நாடுகளுக்கு அனுப்பப்பட்டனர். அவர்களில் சிலர் இராணுவ முகாம்களில் பணியாற்றுகின்றனர். அவர்களில் சிலர் பிக்குகளாகவும், சிலர் சிங்களவர்களாகவும் மாற்றப்பட்டுள்ளனர்.

முன்னாள் அமெரிக்க தூதர் ராபர்ட் பிளேக்கின் கூற்றுப்படி, துணை இராணுவக்குழு இளம் சிறுவர் மற்றும் சிறுமிகளை மலேசியா, மாலைதீவு மற்றும் இந்தியாவுக்கு அடிமை வேலை மற்றும் பாலியல் அடிமைகளாக அனுப்பியது.

ஆனால், காணாமல் ஆக்கப்பட்ட தாய்மார்களின் போராட்டங்களைக் கட்டுப்படுத்த இறப்பு சான்றிதழை தனது முதல் மருந்தாக கொடுக்க விரும்புவதாக அங்கஜன் கூறுகின்றார். அங்கஜன் இதை நிரூபிக்க விரும்பினால், அவர் காணாமல் ஆக்கப்பட்ட ஒருவர் உயிருடன் இருக்கும்போது எடுத்த படத்தையும், இறக்கும்போது எடுத்த படத்தையும், இறந்த பின் எடுத்த படத்தையும் வெளிப்படுத்த வேண்டும் – என்றார். (100)

## மதுபோதையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
பொலிஸாரால் முற்படுத்தப்பட்டார்.

அவர் மீது 7 குற்றச்சாட்டுக்களை முன்வைத்து குற்றப்பத்திரத்தைப் பொலிஸார் தாக்கல் செய்தனர்.

மதுபோதையில் வாகனம் செலுத்தியமை, சாரதி அனுமதிப்பத்திரமின்றி வாகனம் செலுத்தியமை, காப்புறுதிப் பத்திரமின்றி வாகனம் செலுத்தியமை, வரிப் பத்திரமின்றி வாகனம் செலுத்தியமை, தலைக்கவசமின்றி ஆபத்தான முறையில் வாகனம் செலுத்தியமை, தலைக்கவசம் அணியாதவரை பின் இருக்கையில் இருத்தி அழைத்துச் சென்றமை மற்றும் பொலிஸாரின் சமிக்ஞையை மீறி வாகனம் செலுத்தியமை ஆகிய குற்றச்சாட்டுக்கள் அவர் மீது முன்வைக்கப்பட்டன.

எதிரி தன் மீதான குற்றச்சாட்டுகள் அனைத்தையும் ஏற்றுக்கொண்டார்.

அதனால் மதுபோதையில் வாகனம் செலுத்தியமை, காப்புறுதிப் பத்திரமின்றி வாகனம் செலுத்தியமை, சாரதி அனுமதிப்பத்திரமின்றி வாகனம் செலுத்தியமை ஆகிய குற்றங்களுக்கு தலா 25 ஆயிரம் ரூபா வீதமும், ஏனைய 4 குற்றங்களுக்கு 50 ஆயிரத்து 500 ரூபாவும் தண்டப்பணமாக விதித்து நீதிமன்றம் உத்தரவிட்டது.

# இரட்டை வேடம் போடுவதை அரசு உடன் நிறுத்த வேண்டும்

## ரெலோவின் நிதிச் செயலாளர் விந்தன் காட்டம்

(கலையமுதன்)

இதய சுத்தியுடன் அரசாங்கம் தமிழர்களின் விடயத்தில் நேர்மையாக நீதியாக நடக்கவேண்டும். வெளிநாடுகளிலே ஒரு பேச்சு இலங்கையிலே இன்னொரு பேச்சு. இப்படியாக இரட்டைவேடம் போடுகின்ற இந்த அரசியலை அரசாங்கம் உடனடியாக நிறுத்த வேண்டுமென ரெலோவின நிதிச்செயலாளரும் முன்னாள் வடமாகாண சபை உறுப்பினருமான விந்தன் கனகரத்தினம் தெரிவித்துள்ளார்.

கடந்த வியாழக்கிழமை இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

இலங்கையினுடைய ஜனாதிபதி கோட்டாபயராஜபக்ஷ புலம்பெயர் தேசங்களில் இருக்கக்கூடிய தமிழர் அமைப்புகளோடு பேச்சு நடத்தப் போகிறார் என ஐ.நா. மனித உரிமை ஆணையாளருக்கு தெரிவித்திருக்கின்றார்.



வெளிநாடுகளில் குறிப்பாக அமெரிக்கா, பிரித்தானியா, கனடா, ஐரோப்பிய நாடுகளில் புலம்பெயர் தேசங்களில் இயங்கக்கூடிய அமைப்புகளை இலங்கை அரசாங்கம் தடை செய்திருக்கின்றது. கறுப்புப் பட்டியலில் சேர்த்து இருக்கின்றது. அந்த அமைப்புகள் எல்லாம் தமிழ் மக்களுக்காகக் குரல் கொடுக்கின்ற தொடர்ச்சியாக போராடுகின்ற அமைப்புகளை, கடந்த காலங்களில் பயங்கரவாதத்துக்குத் துணை போகின்ற அமைப்புகளாக முத்திரை குத்தி தடை செய்தனர். ஆனால் அந்த அமைப்புகளைத் தடை செய்து வைத்துக்கொண்டு அந்த அமைப்புக்களோடு பேசப் போகின்றோம் என்ற செய்தி நகைப்புக்கிடமாக எண்ணத் தோன்றுகின்றது.

அரசாங்கம் முதலில் அந்த அமைப்புகளைத் தடைப் பட்டியலில் இருந்து நீக்க வேண்டும். அத்தோடு அரசாங்கத்துக்கு ஊது குழலாக இணைந்து செயற்படுகின்ற பல அமைப்புகளும் வெளிநாடுகளில் இருக்கின்றன. அத்தகைய அமைப்புகளோடு அரசாங்கம் பேசுவார்களாக இருந்தால் அதனைத் தமிழ் மக்கள் ஏற்றுக் கொள்ளமாட்டார்கள்.

வடக்கு கிழக்கிலே பெரும்பான்மையான தமிழ்த் தேசியம் சார்ந்த கட்சிகள் இருக்கின்றன. நாடாளுமன்றத்திலும் பலர் பங்கு கொண்டிருக்கின்றார்கள். இந்த இனப்பிரச்சினை விவகாரங்களை எங்களை விடுத்து புலம்பெயர் அமைப்புகளோடு பேசப்போகிறோம் என்று சொல்கின்றமையை ஏற்றுக் கொள்ள முடியாது. அதே நேரத்தில் புலம்பெயர் அமைப்புகள் குறிப்பாக, சில நிபந்தனைகளை விதித்து இருக்கின்றன.

இதய சுத்தியுடன் அரசாங்கம் தமிழர்களின் விடயத்தில் நேர்மையாக நீதியாக நடக்கவேண்டும். வெளிநாடுகளிலே ஒரு பேச்சு இலங்கையிலே இன்னொரு பேச்சு. இப்படியாக இரட்டைவேடம் போடுகின்ற இந்த அரசியலை அரசாங்கம் உடனடியாக நிறுத்த வேண்டும். –என்றார்.



## 'மெனிகே மகே' புகழ் இலங்கை பாடகியை காண இந்தியாவில் குவிந்தனர் ரசிகர்கள்

உலகளாவிய ரீதியில் பிரபலயம் அடைந்துள்ள இலங்கையின் இளம் பாடகி யோஹானி டி சில்வாவை வரவேற்க பெருமளவு இந்திய ரசிகர்கள் ஒன்று கூடியுள்ளனர் என சிங்கள ஊடகம் ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது.

இந்தியாவில் இடம்பெறவுள்ள இசை நிகழ்ச்சி ஒன்றில் கலந்து கொள்வதற்காக யோஹானி அங்கு சென்றுள்ளார். இதன் போது புதுடெல்லி விமான நிலையத்தில் நான்கரை லட்சம் ரசிகர்கள் ஒன்று கூடினர் எனத் தகவல்கள் வெளியாகி உள்ளன.

மெனிக்கே மகே ஹித்தே என்ற பாடல் மூலம் இந்திய இசை ரசிகர்கள் மத்தியில் யோஹானி பிரபலயம் அடைந்துள்ளார் என அந்நாட்டு ஊடகங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.

இந்நிலையில் இந்தியாவுக்கு சென்றுள்ள பாடகிக்கு மகத்தான வரவேற்று கொடுக்கப்பட்டதுடன், ரசிகர்கள் சார்பில் பணப்பரிசும் கொடுக்கப்பட்டதாகத் தெரிய வருகிறது.

யூடியூப் இல் வெளியிடப்பட்ட மெனிக்கே மகே ஹித்தே என்ற பாடல் சர்வதேச ரீதியாக புகழ் அடைந்துள்ளதுடன், இதுவரையில் 13.3 கோடி பார்வையாளர்களை கடந்துள்ளது.

இலங்கையின் வரலாற்றில் சிங்களப் பாடல் ஒன்று சர்வதேச ரீதியாக பிரபல்யம் அடைந்த முதல் சந்தர்ப்பம் இதுவென்பது குறிப்பிடத்தக்கது.

## துறைமுகத்தில் தேங்கிக் கிடக்கும் பால் மாவை திருப்பி அனுப்புகின்றமை தொடர்பாகப் பேச்சுகள்

துறைமுகத்தில் தேங்கிக்கிடக்கும் பால் மாவை திருப்பி அனுப்பி வைப்பது தொடர்பில் பேச்சு நடத்தப்பட்டுள்ளதாக பால் மா இறக்குமதியாளர் சங்கத்தின் பேச்சாளர் லக்ஷ்மன் விரசூரிய தெரிவித்துள்ளார். துறைமுகத்தில் 3 லட்சத்து 60 ஆயிரம் கிலோ எடையுடைய பால் மா தேங்கிக் கிடப்பதாகவும் இவற்றை விடுவிப்பதற்கு அரசாங்கம் இதுவரையில் வர்த்தக வங்கிகளுக்கு டொலர்களை வழங்கவில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதனால் தேங்கிக்கிடக்கும் பால் மாவை வேறு நாடு ஒன்றுக்கு அனுப்பி வைப்பது தொடர்பாகப் பால் மா ஏற்றுமதி செய்த நிறுவனத்துடன் பேச்சு நடத்தியுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்.

இந்த பால் மா கெட்டுப் போகக் கூடிய அபாயம் காணப்படுவதால் அதனை வேறு ஓர் நாட்டுக்கு அனுப்பி வைப்பதற்கு திட்டமிட்டுள்ளதாகவும் அவ்வாறு செய்தால் நாட்டில் பால் மாவிற்கான தட்டுப்பாடு மேலும் அதிகரிக்கும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

வர்த்தக வங்கிகளுடன் பேசிய போது இன்னமும் டொலர்கள் கிடைக்கவில்லை என வங்கிகள் கூறின எனத் தெரிவித்துள்ளார். வங்கியில் பணத்தை வைப்புச் செய்து விட்டு டொலர் கிடைக்கும் வரையில் காத்திருக்க நேரிட்டுள்ளது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஒரு டொலரை 238 ரூவாவிற்கு கொள்வனவு செய்ய சில இறக்குமதியாளர்கள் யோசனை முன்வைத்த போதிலும் அவ்வாறு செய்தால் ஒரு கிலோ பால் மாவிற்கு 144 ரூபா மேலதிகமாக செலுத்த நேரிடும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

## புத்தாக்க அரங்க இயக்கத்தின் இணையவழி அரங்க கதையாடல்

புத்தாக்க அரங்க இயக்கம் வாராந்தம் நடத்தும் இணையவழி அரங்க கதையாடல் நிகழ்வில் கதையாடல் 24 நாளை (ஞாயிற்றுக்கிழமை) இரவு 7 மணிக்கு புத்தாக்க அரங்க இயக்கத்தின் பணிப்பாளர் எஸ்.ரி.குமரன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வில் வலிகாமம் கல்வி வலய ஆரம்ப பிள்ளைப்பருவ, அழகியல் பாட உதவிக் கல்விப்பணிப்பாளர் ச.கிருபானந்தன் சிகிச்சை வழியாக அரங்கினைக் கையாளுதல் என்னும் விடயத்தில் கதையாடவுள்ளார் .

சிறப்பு அதிதியாக வடக்கு கிழக்கு மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் மற்றும் இளைஞர் விவகார விளையாட்டுத்துறை அமைச்சின் முன்னாள் செயலாளர் ஆறுதல் நிறுவன நிறைவேற்றும் பணிப்பாளர் சுந்தரம் டிவகலாலா கலந்து கொள்ளவுள்ளார்

ஏற்புரையை புத்தாக்க அரங்க இயக்கத்தின் நிர்வாகப் பணிப்பாளர் எஸ்.ரி.அருள்குமரன் வழங்கவுள்ளார்.

இந்த இணையவழி அரங்க கதையாடல் நிகழ்வில் ஆர்வமுடையவர்களை சூம் செயலி இலக்கம் 6473348261 கடவுச் சொல் ita ஊடாக இணைந்து கொள்ளுமாறு புத்தாக்க அரங்க இயக்கத்தினர் அழைப்பு விடுத்துள்ளனர்.




## உறவினர்களுடன் சுற்றுலா சென்ற குடும்பம் கொவிட்டால் வவுனியாவில் தனிமைப்படுத்தல்

வவுனியாவில் கொவிட் தொற்றுடன் தனிமைப்படுத்தப்பட்டிருந்த குடும்பமொன்று உறவினர்களுடன், சுற்றுலா சென்றுள்ளதாக கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டையடுத்து, குறித்த குடும்பத்துக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்துள்ளோம் என சுகாதாரப்பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

வவுனியா, பண்டாரிக்குளம் பகுதியில் வசிக்கும் 5 பேர் கொண்ட குடும்பம் ஒன்றில் ஒருவருக்கு கடந்த 21 ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட துரித அன்டிஜன் பரிசோதனையில் கொவிட் தொற்று உறுதி செய்யப்பட்டது.

இதனையடுத்து அந்தக் குடும்பம் வசித்து வந்த பண்டாரிக்குளம் பகுதியில் அமைந்திருந்த வீடு கடந்த 22 ஆம் திகதி முதல் 14 நாள்களுக்கு சுகாதாரப்பிரிவினரால் தனிமைப்படுத்தப்பட்டிருந்தது.

இருப்பினும், சுகாதாரப்பிரிவினருக்கு அறிவிக்காது மேற்படி குடும்பத்தினர் கொவிட் தொற்றாளருடன் இணைந்து வெளிநாட்டில் இருந்து வருகை தந்த தமது உறவினர்களுடன் சுற்றுலா சென்றுள்ளனர் என சுகாதாரப் பிரிவினருக்குக் கிடைத்த முறைப்பாட்டையடுத்து, சுகாதாரப்பிரிவினர் அவர்களது வீட்டுக்குச் சென்றிருந்தனர்.

அங்கு கொவிட் தொற்றாளர் மற்றும் அவருடன் இணைந்து தனிமைப்படுத்தப்பட்டவரும் இருக்கவில்லை.

இதனால், அந்தக் குடும்பத்தினருக்கு எதிராக தனிமைப்படுத்தல் சட்ட விதிமுறை மீறலின் கீழ் பொலிஸார் ஊடாக வவுனியா நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும், குறித்த குடும்பத்தினர் தற்போது உள்ள பகுதியில் அவர்களை தனிமைப்படுத்தவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் சுகாதாரப்பிரிவினர் மேலும் தெரிவித்துள்ளனர்.

காலைக்கதிர் Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## கொரோனாப் பிடி தளர்கிறதா?

**கொரோனாத் தொற்றை ஒட்டி நாட்டில் விதிக்கப்பட்டிருந்த ஊரடங்கும், பொது முடக்கமும் நீக்கப்பட்டிருக்கின்றன. இனி இரவில் மட்டும் ஊரடங்கு நிலைமை நீடிப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.**

**கடைசியாக 41 நாள்கள் நீடித்த பொது முடக்கமும் ஊரடங்கும் மக்களால் தீவிரமாக எடுத்துக் கொள்ளப்படவில்லை என்பதுதான் உண்மை.**

**அப்படியிருந்தும் கூட தொற்றாளர்களின் எண்ணிக்கை வீழ்ச்சியடைந்தது. கொரோனாத் தொற்றுடன் உயிரிழப்போரின் எண்ணிக்கையும் குறைவடைந்தது.**

**நேற்றுமுன்தினம் வரை நீடித்த ஊரடங்கின்போது கடைகள் திறந்திருந்தன. மக்கள் வீதிகளில் தாராளமாக நடமாடினர். கடைசிக் கட்டத்தில் மதுபான விற்பனை நிலையங்கள் கூடத் திறந்திருந்தன.**

**இந்த ஊரடங்கும், முடக்கமும் தீவிரமாக முன்னெடுக்கப்பட்டிருக்குமானால் தொற்று எண்ணிக்கையும் தொற்றுடன் உயிரிழப்போரின் தொகையும் கூட இன்னும் சாதகமான வீழ்ச்சியைக் காட்டியிருக்கக் கூடும்.**

**இப்போதைய சாதகப் பெறுபேறுக்கு இரண்டு அடிப்படைக் காரணங்கள்.**

**ஒன்று – எதிர்பாராத விதத்தில் தடுப்பூசி ஏற்றும் பணி முழு வீச்சில் முன்னெடுக்கப்பட்டமை.**

**மற்றது – மாகாணங்களுக்கு இடையிலான பயணக் கட்டுப்பாடு, பஸ் மற்றும் ரயில் சேவைகள் உள்ளடங்கிய பொதுப் போக்குவரத்து இயங்காமை, பாடசாலைகள் மூடப்பட்டிருந்தமை, தனியார் துறை ஊழியர்களின் சேவை மட்டுப்படுத்தப்பட்டிருந்தமை, கோவில் திருவிழாக்கள், கலியாண வீடுகள் போன்றவை கட்டுப்படுத்தப்பட்டிருந்தமை போன்றவையாகும்.**

**நேற்றுடன் எல்லாம் மாறிவிட்டன. பொதுப் போக்குவரத்துகள் மட்டுப்படுத்தப்பட்ட அளவில் தொடங்கி விட்டன. தனியார் துறை அலுவலங்கள் திறக்கப்பட்டமையால் ஊழியர்கள் அலுவலகங்களில் ஒன்று கூடவிருக்கின்றனர். அதனால் பொதுப் போக்குவரத்து அடுத்த வாரத்தில் தீவிரமடையும்; சனக் கூட்டம் நிரம்பி வழியும் வாய்ப்பும் உண்டு.**

**பொதுப் போக்குவரத்தில் தொற்றுத் தடுப்புத் தொடர்பான சுகாதார விதிகள் முழு அளவில் நடைமுறைப்படுத்தப்படும் என அரச, தனியார் போக்குவரத்துச் சேவைத் துறையினர் உறுதி அளித்தாலும் இந்த வாக்குறுதி எத்தனை நாள்களுக்குத் தாக்குப்பிடிக்கும் என்பதுதான் கேள்வி.**

**இதுவரை நாடு கொவிட் நெருக்கடியை முழு திருப்தி தரும் முறையில் இல்லாவிட்டாலும், ஓரளவுக்கு சமாளித்து விட்டது. ஒரிரு மாதங்களுக்கு முன்னர் பெரும் இக்கட்டை – முற்றாக செயலிழக்கும் நெருக்கடியை – எதிர்கொண்ட சுகாதார, மருத்துவத்துறைகள் கூட ஓரளவு சமாளித்து நிமிர்ந்து விட்டன.**

**இந்த நிலைமை நீடிப்பது கூட இரண்டு விடயங்களில்தான் தங்கியுள்ளது.**

**ஒன்று – தொடர்ந்து மக்கள் உரிய சுகாதார கட்டுப்பாட்டு விதிகளை முழுப் பொறுப்புடன் கடைப்பிடிப்பது.**

**மற்றது – கொரோனா நுண்ணுயிரி புதிய, புதிய – மோசமான – திரிவுகளுடன் அவதாரம் எடுத்து புதிய அச்சுறுத்தலை ஏற்படுத்தாமல் இருப்பது.**

**இரண்டும் சாதகமாக அமையுமானால் நாடு கொரோனாவின் கோரப் பிடியிலிருந்து ஓரளவு நிமிர முடியும்.**

# கிராம மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் வரவு செலவுத் திட்டம்

## எஸ்.வியாழேந்திரன் கூறுகின்றார்




வரவு - செலவுத் திட்டம் முழுக்க முழுக்க வாழ்வாதாரத்தை மையப்படுத்தியதாகவே இருக்கும். ஒவ்வொரு கிராமங்களிலும் உள்ள பிரச்சினைகளை இனங்கண்டு தீர்ப்பதோடு, கிராம மக்களின் வாழ்வாதாரத்தைக் கட்டியெழுப்புகின்ற விடயத்தைப் பிரதான இலக்காகக் கொண்டே வரவு - செலவுத் திட்டம் நிதி அமைச்சரால் தயாரிக்கப்பட்டு வருகின்றது என இராஜாங்க அமைச்சர் எஸ்.வியாழேந்திரன் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு - மண்முனை தெற்கு பட்டிப்பளை பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட படையாண்டவெளி இளந்தளிர் இளைஞர் கழக விளையாட்டு மைதானத்துக்கான முதற்கட்ட அபிவிருத்தி வேலைத்திட்டத்தை ஆரம்பித்து வைக்கும் நிகழ்வு இடம்பெற்றது.

மேற்படி நிகழ்வில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே இவ்வாறு தெரிவித்துள்ளார். இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில் -

கொடுக்கக்கூடிய வேலைத்திட்டங்களை மக்களின் காலடிக்குக்கொண்டு சேர்ப்பதே எங்களது பிரதான நோக்காக இருக்கின்றது. ஆளுந்தரப்பில் நாங்கள் ஒரு முக்கிய பொறுப்பில் இருப்பதால் அதிகளவான வேலைத் திட்டங்களை முடிந்தளவு நாங்கள் கொண்டு வரக் கூடியதாக இருக்கின்றது.

கடந்த காலங்களிலே அரசியல் அதிகாரம் என்பது எங்களிடம் இருக்கவில்லை. தற்போது முடிந்தளவு அவற்றை செய்யக்கூடியதாக இருக்கின்றது. எமது மக்களைப் பொறுத்த வரையிலே இரண்டு பிரதான விடயங்கள் இருக்கின்றன. ஒன்று நீண்டகாலமாகப் புரையோடிப்போயுள்ள எமது மக்களின் பிரச்சினைகளுக்கான தீர்வுகள்.

எமது மக்கள் மத்தியிலே இருக்கின்ற இன்னுமொரு மிகப்பெரிய பிரச்சினை அபிவிருத்தி சார்ந்த விடயங்கள். இவை இரண்டையும் நாங்கள் சமாந்தரமாகக் கொண்டு செல்ல வேண்டும்.

தமிழ் மக்களைப் பொறுத்தளவில் மூன்று தசாப்த கால யுத்தத்தில் பலதரப்பிலும் பாதிக்கப்பட்ட சமூகமாக, பல வகையிலும் இன்னல்களைச் சுமந்து கொண்டிருக்கும் சமூகமாகவும் இருப்பதால் எமது இரண்டு கண்கள் போல எமது சமூகத்துக்குத் தீர்வும் தேவை, அபிவிருத்தியும் தேவை.

உரிமையோடு சம்பந்தப்பட்ட நீண்ட காலம் தீர்க்கப்படாமல் இருக்கின்ற பிரச்சினைகளுக்கான தீர்வை எமது மக்களுக்குப் பெற்றுக்கொடுக்க வேண்டும். அதனை நாங்கள் மிகக் கவனமாகவும், இராஜதந்திரமாகவும் முன்னெடுக்க வேண்டும்.

இந்த கொவிட் நிலைமை இந்த டிசெம்பருக்குள் முடிவுக்குக் கொண்டு வரப்படும் என நம்புகின்றோம். நாட்டில் 75 வீதமானவர்களுக்குக் கொவிட் தடுப்பூசி வழங்கப்பட்டுள்ளது. பாடசாலை மாணவர்களுக்கான தடுப்பூசி வழங்கும் செயற்பாடுகளும் முன்னெடுக்கப்படுகின்றன.

முடக்க நிலை நீக்கப்பட்டாலும் சில கட்டுப்பாடுகளுடன் முற்றுமுழுதாக கொவிட்டில் இருந்து எமது மக்களைப் பாதுகாப்பதற்கான செயற்திட்டங்களை வகுத்து இந்த வருடத்தோடு கொவிட்டில் இருந்து மீண்ட நாடாக எமது நாட்டை மாற்றுவதற்கான செயற்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இந்த ஒரு வருட காலத்திலே கொவிட் மிகப் பெரிய சவாலாக இருக்கின்றது. அதிலிருந்து மீளெழ முடியும். அந்த நம்பிக்கையும் இருக்கின்றது. அதற்கான சாதகமான வழிகளும் எம் கண் முன்னே தெரிகின்றன. அவ்வாறான சூழல் வரும் போது அரசாங்கத்தால் இன்னும் பல பாரிய அபிவிருத்தி சார்ந்த வேலைத்திட்டங்களையும், வாழ்வாதார செயற்பாடுகளையும் முன்னெடுக்க முடியும்.

இம்முறை வர இருக்கின்ற வரவு - செலவுத் திட்டம் முழுக்க முழுக்க வாழ்வாதாரத்தை மையப்படுத்தியதாகவே இருக்கும். ஒவ்வொரு கிராமங்களிலுமுள்ள பிரச்சினைகளை இனங்கண்டு தீர்ப்பதோடு, கிராம மக்களின் வாழ்வாதாரத்தைக் கட்டியெழுப்புகின்ற விடயத்தைப் பிரதான இலக்காகக் கொண்டே வரவு செலவுத் திட்ட நிதி அமைச்சரால் தயாரிக்கப்பட்டு வருகின்றது. அதற்கான திட்ட முன்மொழிவுகள் தற்போது கிராம மட்டங்களில் இருந்து முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

ஒவ்வொரு கிராம சேவகர் பிரிவிற்கும் 30 லட்சம் ரூபா நிதி, ஒவ்வொரு வட்டார உறுப்பினருக்கும் 40 லட்சம் ரூபா நிதி, பிரதேச அபிவிருத்திக்குழுத் தலைவருக்கு 10 கோடி ரூபா நிதி, பிரதேச அபிவிருத்திக் குழுக் களின் இணைத்தலைவருக்கு 2 கோடி ரூபா நிதி என நிதி ஒதுக்கீடுகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

இவையெல்லாம் கிராமியப் பொருளாதாரத்தை வளப்படுத்துகின்ற வகையிலும், கிராமிய மக்களின் வாழ்வாதாரத்தில் மறுமலர்ச்சியை ஏற்படுத்தும் வகையிலுமே ஒதுக்கீடு செய்யப்படவுள்ளன.

எமது மாவட்டத்திலே விவசாயம், மீன்பிடி, கால்நடை, சிறு பொருளாதாரப் பயிர்ச்செய்கை போன்றன இன்னும் மேம்படுத்தப்பட வேண்டும். அதற்கான திட்டங்கள் இன்னும் வகுக்கப்பட வேண்டும்.

அப்போது தான் ஒவ்வொரு தனிப்பட்ட குடும்பங்களின் வாழ்வாதாரமும் உயரும். அதனூடாகவே ஒவ்வொரு குடும்பங்களும் போதிய வருமானத்தைப் பெற்றுக்கொள்ளும். அதற்கான நடவடிக்கைகளையே நாங்கள் முன்னெடுத்து வருகின்றோம் என்றும் தெரிவித்துள்ளார்.

# அரசிலிருந்து வெளியேறும் எண்ணம் பங்காளிக் கட்சிகளுக்கு கிடையாது!

## திஸ்ஸ விதாரண திட்டவட்டம்

ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி தலைமையிலான கூட்டணி அரசில் இருந்து வெளியேறும் நோக்கம் பங்காளிக் கட்சியினருக்குக் கிடையாது என ஆளும்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரும் லங்கா சமசமாஜக் கட்சியின் தலைவருமான பேராசிரியர் திஸ்ஸ விதாரண தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா சுதந்திர பொதுஜன முன்னணி கூட்டணியில் அங்கம் வகிக்கும் பங்காளிக் கட்சிகள் அரசில் இருந்து வெளியேற விரும்பினால் தாராளமாக வெளியேறலாம் என்று பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார் என்று வெளியாகியுள்ள செய்தி அடிப்படையற்றது எனவும் அவர் குறிப்பிட்டார்.

அரசில் காணப்படும் பிரச்சினைகளுக்குக் கூட்டணி என்ற ரீதியில் அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட்டால் மாத்திரமே அனைத்து சவால்களையும் வெற்றிகொண்டு முன்னேற்றமடைய முடியும் என்றே பிரதமர் அனைத்துத் தரப்பினருக்கும் ஆலோசனை வழங்கினார் எனவும் அவர் கூறினார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் குறிப்பிடுகையில் -

ஸ்ரீலங்கா சுதந்திர பொதுஜன முன்னணி என்ற கூட்டணியின் ஊடாக அரசைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்றோம். கடந்த காலங்களில் அரசு எடுத்த ஒரு சில தீர்மானங்கள் தொடர்பில் பங்காளிக் கட்சி உறுப்பினர்கள் அனைவரும் ஒன்றிணைந்து நிலைப்பாட்டை வெளிப்படுத்தினோம். கெரவலப்பிடிய மின்நிலையத்தின் 40 சதவீத பங்குகளை அமெரிக்க நிறுவனத்துக்கு வழங்க அரசு எடுத்த தீர்மானத்துக்குக் கடுமையான எதிர்ப்பை வெளிப்படுத்தியுள்ளோம் - என்றார்.

# தமிழ் ஊடகத்துறையின் ஜாம்பவான் எஸ்.டி.எஸ்.!

**அங்கம் - 93**

**ந.வித்தியாதரன்**

## எஸ்.டி. சிவநாயகம் நினைவுப் பகிர்வு



திருமுருக கிருபானந்த வாரியாருடன் இராஜதுரை குடும்பத்தவர்களும் எஸ்.டி.சிவநாயகம் ஐயாவும்.

**'பொய்மையும் வாய்மை இடத்த புரைதீர்ந்த நன்மை பயக்கும் எனின்'**


- என்றான் செந்நாப் போதகன் வள்ளுவப் பெருந்தகை.

சில சமயங்களில் ஊடகவியலாளனும் இதனைச் செய்ய வேண்டியிருக்கின்றது. சில மூடிமறைப்புகள் உருட்டல், புரட்டல் செய்யத்தான் வேண்டும்.

என்னுடைய 'என் எழுத்தாயுதம்' புத்தகத்தில் ஒரு சம்பவம் குறிப்பிட்டிருக்கிறேன். 'விமான வீழ்ச்சிக்கு வழிவகுத்த சூழ்ச்சி' என்ற தலைப்பில் இவ்விவரம் அதில் பிரசுரமாகியிருந்தது.

புலிகள் - சந்திரிகா சமரச முயற்சியை ஒட்டிய தேனிலவு முறிந்து 'ஈழப்போர் - 3' வெடித்த காலகட்டம் அது. குடாநாடு புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்தது. மீண்டும் யுத்தம் வெடித்து பத்தாம் நாள். 1995 ஏப்ரல் 28 ஆம் திகதி மாலையில் பலாலிக்குப் பக்கத்தில் படையினரின் 'அவ்ரோ' விமானம் ஒன்று வீழ்ந்து நொறுங்கியதில் 38 படையினர் உயிரிழந்தனர். வல்லை வெளிப் பகுதியில் இருந்து புலிகள் நடத்திய தாக்குதலில் அச்சமயம் பலாலியில் இருந்து புறப்பட்ட விமானத்தின் இறக்கைப் பகுதியில் சிறிய காயம் முதலில் ஏற்பட்டது என்றும், புகைத்த விமானம் திரும்பிச் சென்று பலாலியில் தரை இறங்க முன்னர் விழுந்து நொறுங்கி பற்றி எரிந்தது என்றும் கூறப்பட்டது.

புலிகள் நடத்திய தாக்குதலில் விமானம் விழுந்தது என்று எனது செய்தியாளர்களும் பிறரும் தகவல் தந்தனர். ஆனால் விமானம் தொழில்நுட்பக்



விமானச் சிதைவுகள்

கோளாறால் வீழ்ந்தது என்று அரசு அறிவித்தது. புலிகளும் தங்கள் செய்திகளில் அரசுத் தரப்பின் அறிவிப்பை மேற்கோள்காட்டி தொழில்நுட்பக் கோளாறினாலேயே விமானம் விழுந்தது என்று தெரிவித்தனர். அதுமட்டுமல்ல, புலிகளின் அரசியல் பொறுப்பாளர் தமிழ்ச்செல்வன் நான் பணியாற்றிய உதயன் அலுவலகத்துக்கு என்னைத்தேடி முன்னிரவில் காரில் வந்தார். அலுவலகத்துக்குள் வராமல் தனது காருக்கு என்னை அழைத்து காருக்குள் இருந்து தனித்துப் பேசினார். புலிகளின் தாக்குதலில் விமானம் விழவில்லை என்ற சாரப்பட கருத்து வெளியிட்டார். புலிகளின் தாக்குதலில் விமானம் விழுந்தது என்று செய்தி பிரசுரிக்க வேண்டாம், அரசு கூறுவதையே பிரசுரியுங்கள் என்று விநயமாகக் கேட்டுக் கொண்டார்.

நாமும் அப்படியே செய்தி வெளியிட்டோம்.

அடுத்த நாள் பகலில் கொழும்பிலிருந்து பலாலிக்கு வந்த அடுத்த அவ்ரோ விமானம் பலாலி அருகே நவக்கிரி பக்கத்தில் 54 படையினருடன் விழுந்து நொறுங்கியது. அதிலிருந்த அனைவரும் உயிரிழந்தனர். முதல் நாள் மாலை விழுந்த விமானத்தைப் பற்றி விசாரிக்க நியமிக்கப்பட்ட உயர்மட்ட விசாரணை குழுவினரும் அதில் அடக்கம்.

அப்போதுதான் புதிதாக புலிகள் விமான எதிர்ப்பு ஆயுதங்களை சுவீகரித்து விட்டனர் என்பதும், இனியும் விமான எதிர்ப்பு ஆயுதங்களை எதிர்கொள்ளும் பொறிமுறை இல்லாமல் விமானங்களைப் புலிகள் பிரதேசத்தில் பறக்க விடுவது ஆபத்தானது என்பதும் அரசுக்கு புரிய ஆரம்பித்தது. இந்த விடயங்கள் பற்றிய பல சுவையான தகவல்கள் எனது 532 பக்க புத்தகத்தில் உள்ளன. இது புத்தக விளம்பரம் அல்ல, இது போன்ற பல யுத்த கால விடயங்களை விவரமாக அறிய விரும்புவோர் அந்தப் புத்தகத்தைத் தேடிப் பிடித்து வாசியுங்கள்.

இனி விடயத்துக்கு வருவோம். அன்று அடுத்த விமானத்தை இலக்கு வைப்பதற்காக முதல் விமானத்தை வீழ்த்தியமைக்கு உரிமை கோராமல் அதை மறைத்தனர் புலிகள். புலிகளைப் பொறுத்தவரை அவர்களுக்கு நன்மை பெறுவதற்காக அவர்கள் செய்த மறைப்பு தந்திரம் இது.

அதுபோன்று, பத்திரிகையாளர்களாகிய நாமும் சில பல விடயங்களில் மறைப்பு தந்திரம் செய்வதுண்டு. இல்லாத பாத்திரங்களை இருப்பதாக காட்டுவதிலிருந்து பல விடயங்கள் அரங்கேறும்.

இந்தச் சம்பவம் எண்பது முற்பகுதியில் நான் தினபதியில் பணியாற்றியபோது நடந்தது. பத்திரிகை ஆசிரியர் சிவநாயகம் ஐயா பெரும்பாலும் பொதுமக்களை, விருந்தினர்களை நேரில் சந்திக்கின்றமை குறைவு. தமிழர் விடுதலைக் கூட்டணியின் ஆதரவாளர் எனத் தெரிவித்து ஆசிரியர் சிவநாயகம் ஐயாவை சந்திக்க ஒருவர் அலுவலகத்திற்கு வந்து இருக்கின்றார், அலுவலக வரவேற்பு பகுதியில் அமர்ந்து இருக்கின்றார் என்று சிவநாயகம் ஐயாவுக்கு தகவல் தரப்பட்டது. ஆசிரியர் என்னை அழைத்தார்.

"தமிழர் விடுதலைக் கூட்டணி ரவுண்டப் நீங்கள தானே செய்கிறீர்கள், யாரோ அந்தத் தரப்பில் இருந்து வந்துள்ளாராம், என்ன, ஏது என்று விசாரித்து, விடயத்தை முடித்து, அனுப்பி வையுங்கள்!" - என்றார்.

நான் போனேன். நடுத்தர வயதில் ஒருவர் இருந்தார். டிப்டாப் ஆசாமி. ஆங்கிலமும் அதிகம் பறந்தது. தினபதி மீது சற்றுச் சீற்றமாக வந்திருந்தார். ஆசிரியரை நேரில் சந்திக்க வேண்டும் என்று ஒற்றைக்காலில் நின்றார். நான் ஆசிரியர் இல்லை, நான் அவரின் பிரதிநிதி, தமிழர் விடுதலைக் கூட்டணி பற்றிய செய்தி என்றால் என்னோடு பேசலாம் என்று எடுத்துரைத்தேன். அவரோ கேட்பவராக இல்லை. ஆசிரியரை சந்திக்க வேண்டும் என்பதில் விடாப்பிடியாக இருந்தார். கடைசியில் தமது பருப்பு அங்கு வேகாது என்பதை உணர்ந்துகொண்டு விடயத்துக்கு வந்தார்.

"அதென்ன உங்கள் சிந்தாமணி அரசியல் விமர்சனப் பகுதியான காண்டீபம் பத்தியில் அமிர்தலிங்கத்துக்கு எதிராகத் தமிழ் இளைஞர்களைத் தூண்டிவிடும் பாணியில் துடிப்புள்ள இளைஞர்கள் இப்படி கேட்கின்றார்கள், விடுதலையை விரும்பும் இளைஞர்கள் இவ்வாறு கேள்வி எழுப்புகிறார்கள் என்றெல்லாம் எழுதுகின்றீர்கள்? அந்த துடிப்புள்ள இளைஞர்கள் யார்?யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்புக்கு வந்து சிந்தாமணி ஆசிரியரிடம் அப்படி கேள்வி எழுப்பும் - விடுதலை விரும்பும் - அந்த இளைஞர்கள் யார்? அவர்களின் விலாசத்தைத் தருவீர்களா?" - என்று சீறினார்.

எனக்கு விடயம் விளங்கிவிட்டது.

"ஐயா, செய்தி மூலங்களை நாங்கள் காட்டிக் கொடுக்க முடியாது. அந்தச் செய்தி மூலகங்கள் சொல்லும் விடயத்தில் தப்பு இருந்தால் பேசுங்கள். கூறுங்கள். திருத்திக்கொள்ளலாம். ஆனால் செய்தி மூலத்தை நாம் காட்டிக் கொடுக்க முடியாது. ஏன் நான் கூட அந்தத் துடிப்புள்ள இளைஞராக இருக்க முடியாதா?" - என்று கேட்டு அவரின் வாயை அடைத்து ஒருவாறு அனுப்பி வைத்தேன். வந்து சிவநாயகம் ஐயாவிடம் விடயத்தை கூறினேன். அவர் சிரித்தார். அவ்வளவுதான்.

இப்படி அவ்வப்போது சில கதாபாத்திரங்களை கற்பனையில் சிருஷ்டித்துப் பொருத்தமான இடத்தில் இணைத்து உலவ விடுவது கூட ஊடகவியலாளரின் வேலைதான்.

கடந்த வாரம் இத்தொடரை ஊன்றி வாசித்த வாசகர்கள் இரண்டு விடயங்களை கவனித்திருக்க முடியும். லண்டனில் உள்ள பத்திரிகையாளர் ராஜகோபாலுக்கு முப்பது ஆண்டுகளுக்கு முன்னர் தாம் வரைந்த கடிதங்களில் நியூமோராலஜி (எண் ஜோதிடம்) மற்றும் ஜோதிடத்தில் தமக்கிருந்த ஆழ்ந்த புலமையை சிவநாயகம் ஐயா வெளிப்படுத்தி இருந்தமையை நீங்கள் அவதானித்திருக்க முடியும். அது மட்டுமல்ல, சிந்தாமணியில் நியூமோராலஜி பலன்கள் எழுதி வந்த 'ஆர்.வி.' என்ற ஜோதிடர் பற்றியும் அவர் அதில் பிரஸ்தாபித்திருந்தார். 'அவர் ஜோதிடம், எண் ஜோதிடம் இரண்டும் எழுதுவதில் வல்லவர், யாரும் எழுதாத புதிய முறையில் அவர் நியூமோராலஜி எழுதுவார். கீரோ முறை, பண்டிதர் சேதுராமன் முறை எல்லாவற்றையும் விட அவரிடம் சிறந்த முறை ஒன்று உள்ளது. நிச்சயமாக அவர்



எழுதுவது மேல்நாட்டு வாசகர்களுக்குப் பிடிக்கும். அதைத் துணிந்து கூறுவேன். அவரை எழுதும்படி என்னால் பணிக்க முடியும்' என்று குறிப்பிட்டிருந்தார் சிவநாயகம் ஐயா.

நான் தினபதி, சிந்தாமணியில் பணியாற்றிய காலத்தில் இந்த ஆர்.வியின் ஜோதிடக் கணிப்பை வாசித்து வந்திருக்கிறேன். ஆனால் அவரை நேராகச் சந்திக்க எனக்கு வாய்ப்புக் கிட்டியது இல்லை. ஆனால் அவர் கைப்பட எழுதிய ஜோதிட பதிவுகளை புறூவ் வாசித்த நிறைய அனுபவம் எனக்கு உண்டு. அவரின் கையெழுத்தும் கூட எனக்கு மனப்பதிவாக இருக்கிறது.

யார் இந்த ஆர்.வி.? அவரைத் தேடிப் பிடித்தால் சிவநாயகம் ஐயா பற்றிய சுவையான தகவல் ஏதும் கிட்டாதா? - என்று நினைத்தேன். அதனால் அவர் இப்போது எங்கு இருக்கிறார் என்பது பற்றி அறிய சிவநாயகம் ஐயாவின் மகனைத் தொடர்பு கொண்டேன். அவரை சந்திக்க வாய்ப்பில்லை என்றார் ஆசிரியர் சிவநாயகத்தின் மகன் நண்பர் உதயநாயகம். அதற்கு அவர் சொன்ன காரணம் எனக்குத் தூக்கி வாரிப் போட்டது. அப்படி அவர் கூறிய பதில் என்ன? அதனை நாளை பார்ப்போம் நண்பர்களே.

(வளரும்..... )



இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் இலங்கை புலம்பெயர் சட்டவாளர். இலங்கையில் சன்சோனிக் கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பில் பிரதான பங்காற்றிய சட்டத்தரணி. தமிழ் புனர்வாழ்வுக் கழகத்தின் பிதாமகர்களுள் ஒருவர். தமிழரின் உரிமைப் போராட்டத்துடன் நெருக்கமாகச் செயற்பட்ட – செயற்படுகின்ற – புலமையாளர். 'இனப்படுகொலை', 'இனச்சுத்திகரிப்பு' ஆகிய பதங்கள் தொடர்பான சர்வதேச பரிமாணங்களை விளக்குகின்றது அவரது இந்தக் கட்டுரைத் தொடர். இந்தக் கட்டுரைத் தொடருக்கான ஆய்வுக் குறிப்புகளைத் தேடித் தந்துதவியவர் சட்டத்தரணி நிர்மலா பேர்னாட் யோசப். அவர் தற்போது மனிதாபிமானச் சட்டங்கள் தொடர்பான சர்வதேச பரிமாணங்கள் பற்றிய தமது முதுநிலைப்பட்ட ஆய்வை ஆஸ்திரேலிய பல்கலைக்கழகம் ஒன்றில் மேற்கொண்டு வருகின்றார். அவர் முன்னர் இலங்கையில்மாற்றுக் கொள்கைகளுக்கான மையத்துடன் சேர்ந்து இயங்கியவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

- செல்லத்துரை ரவீந்திரன் -

அங்கம் - 148

# இனப் படுகொலையும் தமிழ் மக்களின் அரசியலும்

### 388. அவை எவை?

பிரபாகரனுக்குக் கூட அமிர்தலிங்கம் தன்னோடு இணைந்து விடுதலைக்கான அரசியல் முன்னெடுப்பை எடுப்பார், கூட்டணி தேர்தல் வழியைத் தவிர ஆயுதப் போராட்டத்துக்கு முழுமனதான ஆதரவைத் தருவார் என்ற நம்பிக்கை இல்லாமல் போனது. அதை நேரடியாகவே சென்று தங்களோடு சேர்ந்து அரசியலை செய்யும் படியும், அன்றில் அவர்களை ஒதுக்கி வைத்து செயல்படவேண்டும் என எல்லா விடுதலைக் குழுக்களுமே தீர்மானித்துள்ளன என்பதும் தெரியப்படுத்தப்பட்டது.

விடுதலைப் போராளிகளில் அமிர்தலிங்கத்துக்கும் மங்கையர்கரசிக்கும் பிரபாகரனில் ஒரு தனிப்பட்ட பாசம் இருந்தது. அந்த அன்பும் பரிவும் பிரபாகரனுக்கும் அவர்கள் மேல் இருந்தது. அவர்களைச் சந்திக்கப்போகும் நேரமெல்லாம் பிரபாகரன் அவர்களுடன் சாப்பிடுவது வழக்கம். மங்கையர்கரசி பிரபாகரனை ஒரு மகனாக - தன்பிள்ளைகளின் வயதொத்தவராக - பார்த்தார். பிரபாகரனுக்கு பிடித்த விதத்தில் மங்கையர்கரசி கோழிக் குழம்பு பிரட்டல் செய்து கொடுப்பது மட்டுமல்லாமல், அவ்வப்போது வீட்டுக்கு வரும் மற்றவர்கள் மூலம் அவருக்குக் கொடுத்து விடுவதும் வழமை. மங்கையர்க்கரசி தான் இந்தியாவுக்குப் போகும் போதெல்லாம் யாழ்ப்பாணத்திலிருந்து கோழிகறி எடுத்துச் செல்வதும் பிரபாகரன் அதைப் பெற்றுக் கொள்வதும் வழமை. அது போராளிகள் அனைவரும் அறிந்தது. பிரபாகரன் அமிர்தலிங்கத்தை தனக்குப் பக்கபலமாக வைத்திருக்க விரும்பினார். ஆனால் மற்ற விடுதலைக் குழுக்களோ அவர் (அமிர்) அப்புறப்படுத்தப்படவேண்டும் என்பதில் - முக்கியமாக ஈரோஸ், GUES போன்ற அமைப்புக்கள் - தீவிரம் காட்டின.



ஆனால் அமிர்தலிங்கமோ பிரபாகரனுக்கு 'மக்கள் உங்களை இன்னும் ஏற்றுக்கொள்ளவில்லை, ஆகையால் நான் அவர்களைக் கைவிட முடியாது. நீங்கள் எவ்வளோ சொல்லியும் 1981 மாவட்ட சபைகளுக்கான தேர்தலில் எங்களுக்கு அமோக ஆதரவு தந்தார்கள்' என மாறியிருந்த நிலை புரியாது, மக்கள் எங்களது அனுபவத்தையும் அவர்களுக்காகப் பட்ட கஷ்டங்களைத் தெரிந்து வைத்திருக்கிறார்கள் என அடம்பிடித்தார்.

இதற்கிடையில் ஜே.ஆரின் குள்ள நரித் தந்திரமோ விடுதலைக் கூட்டணியினரை அரசியல் அந்தகாரத்துக்கு தள்ளுவதாக இருந்தது. கூட்டணிக்கும் விடுதலைப் போராளிகளுக்கும் இடையில் நெரிசலை ஏற்படுத்தி, அவர்களுக்குள் மோதலை ஏற்படுத்த சிலசில சலுகைகள் தர பேசுவோம் என்று அறிவிக்க, கூட்டணியினர் அவற்றை ஏற்பதில் அவர்கள் அந்நியப்படுத்தப்படுவர் எனஜே.ஆர்.கணக்கெடுத்தார். அதற்கு 4 மார்ச் 1983 விடுதலைப் புலிகளின் உமையாள்புரத்தில் நடத்திய தாக்குதலைப் பாவித்து சந்திப்பை ஏற்படுத்தி யாழ்ப்பாண நாடாளுமன்ற உறுப்பினர்களை உள்ளடக்கி கூட்டத்துக்கு அறிவித்தல் கொடுக்கப்பட்டது.



### 389. சந்திப்பு நடந்ததா?

கேள்விப்பட்டதும் இளைஞர்கள் கொதித்தார்கள். அமிர்தலிங்கத்தை நேரடியாகவும் சந்தித்து வாதங்கள் வைக்கப்பட்டாலும் அவரும் விட்டுக்கொடுக்கவில்லை. அமிர்தலிங்கத்தை நன்கு அறிந்தவர்கள், பழகியவர்கள் அவருக்கு சட்டென வரும் கோபத்தையும், அது உடனேயே தணிந்து வேதனையில் மேலும் விளங்கப்படுத்துவதும்,தனது ஆளுமையில் வெளிப்படுத்தும் சிறுதிமிரையும் அறிவார்கள். இதுவே தென்பகுதி இனவாத அரசியல்வாதிகளிடையேயும், மமதையான பௌத்த பீடங்களிடையேயும் தமிழ்மக்களை அடக்கி ஆள, முதலில் அமிர்தலிங்கம் அடக்கப்படவேண்டும் என்ற பிரச்சாரங்களுக்கு வழி கோலின. அவருடைய அப்படியான ஆணித்தரமான ஆளுமையான பேச்சுக்கள்தான் தமிழ் மக்களுக்கு ஒரு நீதியான தீர்வு தரப்படும் வரை அவர்கள் போராடாமல் விடப்போவதில்லை என்ற வன்மத்தையும் அவர்களுக்கு உருவாக்கியது.

இன்னொரு வகையில் பிரபாகரன் பிடிவாதம் கொண்டவர். தனது நோக்கு - பாதை - எது என்பதை 16 வயதிலிருந்து வீட்டை விட்டு வெளியேறி வகுத்து, அதையே தனது தியானமாக வாழ்க்கையை அமைத்தவர். தனது நோக்கின் பாதைக்கு எதிராக குறுக்கிட்டவர்களை அப்புறப்படுத்துவதற்குத் தயங்கியவரல்லர். பிரபாகரன் தான் அரசியல் தலைமையைப் பொறுப் பேற்க வேண்டும் என்ற தீர்மானத்திற்கு வந்திருந்தார். ஆயினும் இன்னும் அமிர்தலிங்கத்தை தங்களோடு கொண்டு செல்லவேண்டும் என்ற விருப்பம் இருந்தது. இந்தச் சந்திப்பு காரசாரமாகவும் திருப்பு முனைகளின் அடிமட்டமாகவும் இருந்தது.

இளைஞர்கள், எந்தக் காரணத்துக்காகவும் சந்திப்பு தேவையில்லை என்பதிலேயே நின்றார்கள். ஜே.ஆரும் தனது பகடைகாய்களை சரியாகவே நகர்த்தியிருந்தார். 1981ஆம் ஆண்டிலிருந்து பாதுகாப்பு சீர்குலைவுகளால் யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ளூராட்சிச் சபைத் தேர்தல்கள் நடத்தப்படவில்லை. அரசாங்கத்தின் நியமனதாரிகளே அதனை கவனித்துக் கொண்டிருந்தனர். ஆகவே அதனை நடத்தி மக்களால் தெரியப்பட்டவர்களுக்கு அதிகாரத்தை தரவேண்டும் எனவும், அதற்குப் பாதுகாப்பு நிலைமைகளை அறியவே அந்தக் கூட்டத்தை ஏற்படுத்துவதாகவும் தென்பகுதியினதும் பத்திரிகைகள் மூலம் வரிவரியாக எழுதிக் குவித்தார். அதிலேயே இன்னுமொரு காயையும் நகர்த்தி இருந்தார். அது இதனை மாவட்ட ரீதியில் யாழ்ப்பாண நாடாளுமன்ற அங்கத்தினரோடு யாழ்ப்பாண அரசாங்க அதிபர் யோகேந்திரா துரைசாமி அழைப்பு தந்து முன்னெடுக்கிறார். யாழ்ப்பாண மாவட்ட இராணுவத் தளபதி, பொலிஸ் மேலதிகாரிகளைப் பங்குபற்றக் கேட்டிருக்கிறேன் என்பதும் அவரது பரப்புரை. கூட்டணியினர் பங்குபற்றாது விட்டால், தான் அதிகாரங்களை மக்களுக்கு கையளிக்க ஏற்பாடு செய்கிறேன், ஆனால், இவர்களோ இளைஞர்களுக்கு, அவர்களின் வன்முறைக்கு, மறைமுக ஆதரவு கொடுத்தோ, பயந்தோ உரிமைகளைக் கையெடுக்க முன்வருகிறார்களில்லை என சர்வதேசங்களுக்கு - அவர்களின் அழுத்தங்களுக்கு எதிராக - விளக்கம் கொடுப்பது அவர் திட்டம்.

அமிர்தலிங்கம் யோகேந்திரா துரைசாமியிடமிருந்து வந்த அழைப்பிதழைக் காட்டி பேசும் பொருளாக எவை அமைந்திருந்தன என்பதையும் விளக்கி, அப்படியான கூட்டத்திற்குப் போய் அதனை வலியுறுத்தி, தேர்தல்களை வைக்கக் கேட்பதில் என்ன தவறு என ஒற்றைக்காலில் நின்றார்.

இளைஞர்கள் இணங்கவில்லை. முடியுமா, முடியாதா என்பதுதான் கேட்கப்பட்டது.

அமிர்தலிங்கமும் விட்டுக் கொடுக்கவில்லை. கூட்டணியின் மத்திய குழு பங்குபற்றுவது என ஏற்றுக்கொண்டதால் தாங்கள் கலந்துகொள்ளுவோம் என்றும், இங்கு ஒரு தலைமைதான் இருக்கமுடியும், மக்கள் உங்களை இன்னும் ஏற்றுக் கொள்ளவில்லை, அவர்களது கஷ்டங்களில் இதுவரை நாங்கள் நின்றமையை அவர்கள் தெரிந்துள்ளார்கள். நம்பிக்கை வைத்துள்ளார்கள், இதுபோல் நீங்கள் 1981 மாவட்ட சபைத் தேர்தலை குழப்பியபோதும் மக்கள் எங்களுக்கு பெரியளவில் ஆதரவு தந்தார்கள், ஆனபடியால் நாங்கள் அவர்களைக் கைவிட முடியாது, நீங்கள் சிலவற்றை செய்துவிட்டு, ஓடி ஒழிந்து விடுவீர்கள், அதை விளங்கிக் கொள்கிறோம், ஆனால் அவற்றின் விளைவுகளுக்கு முகம் கொடுத்து மக்களையும் பார்க்கவேண்டியவர்கள் நாங்கள், ஆகவே அவர்களிடம் விட்டு விடுவோம், அதன் பின்பு பார்க்கலாம் என்றார். அத்துடன் சந்திப்பு முடிந்தது.

அமிர்தலிங்கம் மசியவில்லை. தங்களது தலைமைக்கு எழும் சவாலாகவே அதனைப் பார்த்தார்.



(வளரும்......)

காலைக்கதிர்
Kalaikkathir



**‘கம்பவாரிதி’ இலங்கை ஜெயராஜ் தமது ‘உகரம்’ இணையத்தளத்தில் ‘பாட்டும் நானே! பாவமும் நானே!’ என்ற தலைப்பில் வாராந்தம் வரையும் கேள்வி – பதில் பகுதி ‘காலைக்கதிர்’ நாளிதழில் ஒவ்வொரு வாரமும் வெளியாகி வாசகர்களின் அறிவுக்கு தீனியாகிறது.**

# பாட்டும் நானே? பாவமும் நானே!




**1. கேள்வி:-** உங்கள் கழகக் குடும்பத்தைச் சேர்ந்தவரையே பகிரங்கமாய் நீங்கள் விமர்சிக்கிறீர்கள். அப்படிச் செய்வது தவறில்லையா?

**பதில் :-** மற்றவர்கள் விமர்சிப்பதன் முன்னர் நான் விமர்சிப்பது நல்லது என்று நினைத்தேன். இதைச் சொல்லும் போது ஒருசம்பவம் என் ஞாபகத்திற்கு வருகிறது. எங்கள் ஆசிரியர் வித்துவான் ஆறுமுகம் அவர்கள் மிக மென்மையானவர். ஒருமுறை அவருடைய மருமக்களான அண்ணன், தம்பியர் இருவர்க்கிடையில் வியாபாரம் சம்பந்தமாய் சண்டை வந்து, ஒருவரோடு ஒருவர் அடிபட இறுதியில் பொலிஸ் வந்து இருவரையும் கைது செய்து கொண்டுபோனது.

மருமக்கள் மீது பெரிய அன்பு கொண்டிருந்த எங்களது வித்துவான், அவர்களை மீட்டுவர பொலிஸ் ஸ்ரேஷனுக்குச் சென்றாராம். மென்மையான அவர் அங்கு வைத்துத் தன் மருமக்களின் கன்னத்தில் அறைந்ததாகக் கேள்விப் பட்டேன். பின் அவரைச் சந்தித்தபோது ஏன் அப்படிச் செய்தீர்கள்? எனக் கேட்டேன்.


வித்துவான் ஆறுமுகம்

அதற்கு அவர், நான் நிற்கத்தக்கதாக அவர்கள் பொலிஸ்காரரின் முன்னாலேயே அடிபடத் தொடங்கி விட்டார்கள். பேசாமல் விட்டால் எனக்கு முன்னாலேயே அவர்களை இன்ஸ்பெக்டர் அடிப்பார் போலத் தெரிந்தது. அதனால்தான் நான் முந்திக் கொண்டு அவர்களை அடித்தேன். இன்ஸ்பெக்டர் திடுக்கிட்டு என்னைச் சமாதானம் செய்து, பின் அவர்களை அனுப்பிவிட்டார். நான் அடித்திராவிட்டால் அவர் அடித்திருப்பார் என்றார்.

உரிமையுள்ளவர்களை மற்றவர்கள் சீண்டும்படியாக விட்டுவிடக்கூடாது. அதைவிட நாம் முந்திக்கொண்டு விமர்சித்து விடுவதுதான் நல்லது, அதனால்த் தான் நானே முந்திக் கொண்டு விமர்சித்தேன். இப்போதும் சொல்கிறேன். நான் சொன்னவை அத்தனையும் நிச்சயமான உண்மைகள்தான்.

**உலகநாதரின் ஒப்பீனியன் ⁎ ‘விஷயமுள்ள வித்துவான்தான்...... நான் அந்தப் பழைய வித்துவானைச் சொல்லுகிறேன். ஹி...ஹி...ஹி..!**

**2.கேள்வி:-** கடைசியில், கூட்டுக் கட்சியினரை விரும்பினால் நீங்கள் வெளியே போகலாம் என்று பிரதமர் சொல்லி விட்டாரே பார்த்தீர்களா?


மஹிந்த

பதில்:- அவர்களாய்ப் போவதற்கு முன் தானாய் சொன்னால் மரியாதையாய் இருக்கும் என்று நினைத்திருப்பார் போல..!

**உலகநாதரின் ஒப்பீனியன் ⁎ ‘சட்டி சுட்டதடா கை விட்டதடா!’**

**3. கேள்வி:-** பல பட்டங்களைப் பெற்று வைத்திருக்கும் பல்கலைக்கழகத் தமிழ்த் துறைப் பேராசிரியர்களை எதற்கெடுத்தாலும் குறை சொல்கிறீர்கள். அவர்கள் பெற்ற பட்டங்கள் எல்லாம் உங்களுக்கு பெறுமதியாய்த் தோன்றவில்லையா?

**பதில் :-** மீண்டும் ஒரு சம்பவம் நினைவுக்கு வருகிறது. ஒருநாள் இலக்கண வித்தகர் நமசிவாயதேசிகரிடம் பாடம் கேட்டுக்கொண்டிருந்தேன். அப்போது ஒரு விரிவுரையாளர் அங்கு வந்தார். வந்தவர், என்னை முறைத்துப் பார்த்து விட்டு வித்தகரை வணங்கினார். பின்னர் ‘ஐயா! எனக்குக் கலாநிதிப் பட்டம் கிடைத்துவிட்டது. அதைச் சொல்லிட்டுப் போகத்தான் வந்தனான்’ என்று மகிழ்ச்சியோடு சொன்னார். அவர் முகத்தில் எல்லையற்ற பிரகாசம். செய்தியைச் சொல்லிவிட்டு வித்தகர் ஐயாவின் வாயிலிருந்து ஒரு பாராட்டை எதிர்பார்த்தபடி நின்றார் அவர்.

வித்தகர் ஐயாவோ கண்ணை மூடி எந்தப் பிரதிபலிப்பும் இல்லாமல் சிறிது நேரம் மௌனமாக வெற்றிலை சப்பினார். பின் கண்ணைத் திறந்தவர், அந்த விரிவுரையாளரைப் பார்த்து ‘கலாநிதிப் பட்டம் கிடைத்தது மெத்தச் சந்தோசம். அப்ப இனி நீர் பயப்படாமல் படிக்கத் தொடங்கலாம்.’ என்றாரே பார்க்கலாம்! விரிவுரையாளரின் முகம் கறுத்தே போய்விட்டது.

உங்களின் கேள்விக்கான பதில் இந்தச் சம்பவத்திற்குள் இருக்குமென்று நினைக்கிறேன்.

**உலகநாதரின் ஒப்பீனியன் ⁎ ‘வித்தகக் குசும்பு என்கிறது இதைத்தானோ?’**

**4. கேள்வி:-** ஒரு மாணவனிடம் கேள்வி கேட்கும் போதும் அவனுக்குப் பதில் சொல்லும் போதும் என்ன நோக்கத்தோடு ஒரு ஆசிரியர் செயற்பட வேண்டும் ?

**பதில் :-** கேள்வி கேட்கும் போது மாணவனைத் தன் நிலைக்கு உயர்த்த நினைத்து கேட்கவேண்டும். பதில் சொல்லும்போதுதான் மாணவனின் நிலைக்கு இறங்கி வந்து பதில் சொல்ல வேண்டும். கேள்வியை அப்படிக் கேட்டால் அறிவுள்ள மாணவன் உயர்வான். பதிலை இப்படிச் சொன்னால் அறிவில்லாத மாணவனும் உயர்வான்.

**உலகநாதரின் ஒப்பீனியன் ⁎ ‘வாள் வெட்டுக்குப் பயந்து வாத்திமார் கேள்வி கேட்கிறதை விட்டு கன நாளாச்சுங்கோ... ஹி...ஹி...ஹி.... !**

**5. கேள்வி:-** அண்மையில் நாடாளுமன்றத்தில் சிறிதரன் உரையாற்றிக் கொண்டிருந்த போது, அவருக்குப் பின்னால் இருந்த சாணக்கியன் கொஞ்சம் கூட நாகரிகம் இல்லாமல் தொலைபேசியில் சத்தமாய்ப் பேசிக் கொண்டிருந்தையும், சிறிதரனும் சுமந்திரனும் ஜாடை காட்டிக் குறிப்பால் உணர்த்தவும் அதை அலட்சியம் செய்து அவர் நிறுத்தாமல் தொடர்ந்து பேசிக் கொண்டிருந்ததையும் முகநூலில் பார்த்தீர்களா? அது பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

**பதில் :-** கவனித்துக் கவலைப்பட்டேன். தன் கட்சியைச் சேர்ந்த அனுபவத்திலும் வயதிலும் தன்னைவிட மூத்த


சாணக்கியன்

ஒருவர் பேசிக் கொண்டிருக்கிறார் என்ற எண்ணம் சிறிதும் இன்றி, சாணக்கியன் நடந்துகொண்ட விதம் மிக அநாகரிகமானது. நாடாளுமன்றில் எதிரணி உறுப்பினர் ஒருவர் பேசினாற் கூட அப்படி நடந்துகொள்வது தவறென்றே நினைக்கிறேன். கௌரவ நாடாளுமன்ற உறுப்பினர் என்று அழைக்கப்படுவதன் அர்த்தத்தை செயலில் காட்ட சாணக்கியன் பழகிக் கொள்ள வேண்டும்.

நாடாளுமன்றினுள்நுழைந்ததும் மும்மொழி ஆட்சி யோடும் தர்க்க அறிவோடும் சுய கௌரவத்தோடும் இனப் பற்றோடும் சாணக்கியன் ஆற்றிய உரைகளைக் கேட்டு உலகெங்கிலும் உள்ள ஈழத்தமிழர்கள் பெருமை கொண்டார்கள். பாராட்டு மழை பொழிந்தது. அந்தப் பாராட்டு மழையில் சாணக்கியனின் சமநிலை கெட்டுவிட்டதோ என நினைக்கும்படி அண்மைக்காலமாக அவரின் செயற்பாடுகள் இருக்கின்றன.

நாடாளுமன்றில் எதிரணியினரோடு சிங்கள மொழியிலேயே விளாசித்தள்ளுகிறார். அவரது மொழியாற்றல், கேட்க நன்றாகத்தான் இருக்கிறது. ஆனால் தமிழின் உரிமைக்காக உணர்ச்சிவசப்பட்டு பேசுகிறவர், நாடாளுமன்றில் தமிழில் பேசும் தன் உரிமையை விட்டுக் கொடுப்பது சரியா? என்று எண்ணத் தோன்றுகிறது.

அவர் பேசும் கருத்துக்களில் பிழை இல்லை. பேசும் தொனியில் பிழை இருக்குமாற்போல் தெரிகிறது. ஒரு சான்றோன் போல் அன்றி வர வர ஒரு சண்டியன் போற் பேசப் பார்க்கிறார். அன்று தொட்டு நம் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் பெரும்பாலும் கௌரவத்திற்கு உரியவர்களாகவே பேரினத்தாராலும் மதிக்கப்பட்டிருக்கிறார்கள். சபையில் அவர்களை எதிர்த்தவர்களும் வெளியில் அவர்களை மதித்து நடந்ததுதான் வரலாறு.

சாணக்கியன் அண்மைக்காலமாக நாடாளுமன்றில் எதிரணியினருடன் செய்யும் விவாதங்கள் ‘சந்திச் சண்டைகள்’ போல் இருக்கின்றன. பேசும் தொனி, பேசும் மொழிநடை, உடல்மொழி என்பவற்றில் கௌரவத்தன்மை குறைந்து கொண்டே வருகிறது. அது அவருக்கு மட்டுமன்றி, நம் இனத்திற்கும் மதிப்பைத் தேடித்தரப் போவதில்லை. சில கீழ்மட்ட மக்களிடம் கைதட்டை வாங்கித்தர மட்டுமே அது உதவும். உயர்ந்தோரிடம் கண்ணியத்துடன் கூடிய மதிப்பை நிச்சயம் அது பெற்றுத்தராது.

பலவிடயங்களிலும் சுமந்திரனைப் பின்பற்றும் சாணக்கியன் இந்த விடயத்திலும் அவரைப் பின்பற்றுவது நல்லது. ‘இளங்கன்று பயமறியாது’ என்பார்கள். இளவயது இரத்தமும் அவருடைய இந்தப் போக்கிற்குக் காரணமாக இருக்கலாம். புகழுக்கு அசையாதவனே வாழ்வில் உயர முடியும். நீண்ட நாள்களிற்குப் பிறகு தமிழினத்திற்குக் கிடைத்த ஓர் ஆற்றலாளன். தமிழினம் அவரை இழந்து விடக்கூடாது எனும் அக்கறையிலேயே இதை எழுதுகிறேன். சிந்திப்பாராக!

**உலகநாதரின் ஒப்பீனியன் ⁎ ‘சபாஷ்! சரியான நேரத்தில் போடப்படும் சறுக்குக் கட்டை’**


**6. கேள்வி:-** கூட்டமைப்புக்குள் சுமந்திரனின் தன்னிச்சையான செயற்பாடுகளை கட்டுப்படுத்த வேண்டும் என்று, தன்னைச் சந்தித்து முறையிட்ட மாவை, சித்தார்த்தன், செல்வம் அடைக்கலநாதன் ஆகியோரிடம் கட்டாயம் தான் அதைச் செய்வதாய், சம்பந்தர் ஐயா வாக்குறுதி அளித்திருக்கிறாராமே?

**பதில் :-** அந்த வாக்குறுதியைத் தண்ணியில்தான் எழுதி வைக்கவேண்டும். இது எத்தனையாவது முறை அளிக்கப் படும் வாக்குறுதியாம்? சைவசித்தாந்திகள், சிவமும் சக்தியும் இரண்டாகக் காட்சி தந்தாலும் அவை இரண்டும் ஒன்றேதான் என்பார்கள். அதுபோல சம்பந்தரும் சுமந்திரனும் இரண்டாகக் காட்சி தந்தாலும்


சம்பந்தன், சுமந்திரன்

அவ்விருவரும் ஒருவர்தான் என்பதும், சக்தி இல்லாமல் சிவம் இல்லை என்பதும் பாவம் இந்த ‘அப்பிராணிகளுக்குத்’ தெரியவில்லை. முறைப்பாடு வைக்க வருகிறவர்களை வார்த்தைகளால் மட்டும் திருப்திப்படுத்துவதில் சம்பந்தருக்கு நிகர் சம்பந்தர்தான்.

**உலகநாதரின் ஒப்பீனியன் ⁎ ‘நீ பாதி நான் பாதி கண்ணே! அருகில் நீயின்றி தூங்காது கண்ணே!’ - சூப்பர் சோங். ஹி..ஹி..**



இந்தவாரம் இவர்

ஆக்கம் - ப்ரியமதா பயஸ்

# மின்னஞ்சலை [Email] கண்டுபிடித்த தமிழன்

# சிவா அய்யாதுரை

அமெரிக்காவின் நியூஜெர்ஸி மாகாணத்தில் உள்ள நெவார்க் என்ற ஊரில் வசிக்கும் சிவா அய்யாதுரை இந்தியாவைச் சேர்ந்த தமிழராவார் - அவருடைய அம்மா மீனாட்சி தூத்துக்குடி மாவட்டத்தில் உள்ள பரமன்குறிச்சியை சொந்த இடமாகக் கொண்டவர் அவரின் அப்பா யுனிலீவர் நிறுவனத்தில் உற்பத்தித்துறைத் தலைவராக இருந்தவர்.

சிவாவிற்கு 7 வயதாக இருக்கும் போது இவரது குடும்பத்தினர் அமெரிக்காவின் நியூஜெர்ஸி மாகாணத்திற்கு குடிபெயர்ந்தனர்.

பாடசாலையில் படிக்கும் பொழுதே FORTRAN, COBOL, PL/1, SNOBOL, BASIC, ஆகிய 5 மொழிகளை சிவா கற்று தேர்ச்சியடைந்தார் - 1978 இல் யுனிவர்சிட்டி ஒ ஃப் மெடிஸின் அண்ட் டென்ஸ்ட்ரியில் கம்பியூட்டர் புரோகிராம் பணியில் சேர்ந்தார்.

அப்போது அங்கே உள்ள அலுவலகத்தில் உள்ள அனைத்து தகவல் பரிமாற்றங்களும் காகிதத்தில் எழுதப்பட்டு அதன் மூலமே நடந்தன.

இது மனித உழைப்பையும், நேரத்தையும் அதிகமாக எடுத்துக் கொண்டதால், இந்தத் தகவல் தொடர்பு பணியைக் கம்பியூட்டர்மயமாக்க முடிவெடுத்தார் சிவா.

தொடர்ந்து பலநாள்கள் தூக்கம் இல்லாமல், கடுமையாக உழைத்து தகவல் தொடர்புக்கான கம்பியூட்டர் புரோகிராமை தனது 14 ஆவது வயதில் உருவாக்கினார்.

இதுவே இ - மெயில்(E - MAIL) என்று அழைக்கப்படுகிறது.

சுமித்சோனியன் தேசிய அமெரிக்க வரலாற்று அருங்காட்சியகம்1982இல் இவரது கண்டுபிடிப்பை அங்கீகரித்தது.

வி.ஏ. சிவா அய்யாதுரை. இமெயிலை உருவாக்கி உலகுக்கு அறிமுகப்படுத்தி முறைப்படி தனது கண்டுபிடிப்புக்கு காப்புரிமையும் பெற்றவர்.

பள்ளிப்பருவத்திலேயே சிவா அய்யாதுரை இ - மெயிலைப் பயன்படுத்த ஆரம்பித்து விட்டாராம். ஆனால் 1981ஆம் ஆண்டு முதல்தான் இதை வெளியுலகுக்கு அவர் அறிமுகப்படுத்தியுள்ளார். சிவா அய்யாதுரை தமிழராக இருந்தபோதிலும் அமெரிக்காவில் 1978ஆம் ஆண்டு அவர் மேல்நிலைப்பள்ளி மாணவராக இருந்தபோது இமெயிலை கண்டுபிடித்து பயன்படுத்த ஆரம்பித்தார்.

அவர் கண்டுபிடித்த மெயிலுக்கு வைத்த பெயர் இன்டர் ஆபீஸ் மெயில் சிஸ்டம். அதுதான் இமெயிலின் பிறப்பாக அமைந்தது. 1981ஆம் ஆண்டு இந்த இமெயிலை வெளியுலகுக்கு அவர் அறிமுகப்படுத்தினார். இதற்காக அவருக்கு வெஸ்டிங்ஹவுஸ் அறிவியல் திறன் விருதும் கிடைத்தது.

அதன் பின்னர் 1982 ஆம் ஆண்டு ஒகஸ்ட் 30ஆம் திகதி இந்த இமெயில் கண்டுபிடிப்பை அங்கீகரித்த அமெரிக்க அரசு அவருக்குப் பாராட்டும் தெரிவித்தது.

அமெரிக்காவின் நியூஜெர்ஸியில் உள்ள லிவிங்ஸ்டன் உயர் நிலைப் பள்ளியில் படித்துக் கொண்டிருந்த போதுதான் தனது சொந்த உபயோகத்திற்காக இந்த மின்னஞ்சல் முறையை உருவாக்கினார் அய்யாதுரை.

பின்னர் அதை நியூஜெர்ஸி, மருத்துவ பல்கலைக்கழகத்திற்கும் சொல்லிக் கொடுத்து அவர்களிடம் அதை ஒப்படைத்தார். அய்யாத்துரை இமெயிலைக் கண்டுபிடித்த சமயத்தில் சொப்ட்வேயார் பொருள்களை காப்புரிமை பெற சட்டத்தில் இடம் இல்லாத நிலை இருந்தது.

இமெயிலை முதன்முதலில் உருவாக்கியவர் அய்யாதுரைதான் என்றாலும் கூட மேலும் சிலர் தாங்கள்தான் இ - மெயிலை கண்டுபிடித்தோம் என பின்னாளில் உரிமை கோரவே சர்ச்சைகளும் கிளம்பின. ஆனாலும் அய்யாதுரைதான் இமெயிலின் தந்தை என்பதில் சந்தேகம் இல்லை. இன்றைய இ - மெயில் காலத்தில் நாம் அனுப்பும் ஒவ்வொரு இ - மெயிலிலும் அய்யாதுரையின் உழைப்பு அடங்கியுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

ஒரு வீடியோ, போட்டோ, கடிதமாகா, இருக்கட்டும் உடனே ஒருவருக்கு அனுப்ப வேண்டும் என்றால் உடனே (Email) லில் அனுப்பினால் அனுப்பிய மறு நிமிடம் உங்களுக்குக் கிடைத்துவிடும். தனிநபர்களுக்கு இடையிலான தகவல் பரிமாற்றமாகட்டும், நிறுவனங்களுக்கிடையிலான தகவல் பரிமாற்றமாக இருக்கட்டும் இப்போது (Email) தான் கதி என்ற நிலை உருவாகி விட்டது.

14 வயதில் பலநாள்கள் தூக்கம் இல்லாமல், கடுமையாக உழைத்து தகவல் தொடர்புக்கான கம்பியூட்டர் புரோகிராமை உருவாக்கினார் சிவா அய்யாதுரை அதன் Code அப்போதைய காலத்தில் ஐம்பதாயிரத்துக்கும் மேற்பட்ட வரிகளை உடையதாக இருந்தது. அதை E - MAIL என்று அவர் அழைத்துள்ளார். தான் இந்த E - MAILஐக் கண்டுபிடிப்பதற்கு முன்பு கம்பியூட்டரின் மூலம் செய்திகளை அனுப்புவது இருந்தது என்றாலும் ஒரு கம்பியூட்டருக்கும் இன்னொரு கம்பியூட்டருக்கும் இருந்த நேரடி இணைப்பின் மூலமாக இருந்தது. அப்படி அனுப்பியதும் வெறும் டெக்ஸ்ட்



மெசேஜாக மட்டுமே இருந்தது. தான் முதன்முதலில் கம்பியூட்டர் மூலம் செய்திகளை அனுப்புவதற்கு புரோகிராமை உருவாக்கியவன் என்கிறார் சிவா அய்யாதுரை.

FORTRAN IV என்ற programming language ஐப் பயன்படுத்தி அதை உருவாக்கியவர் அவர் இது DATABASE, LAN(LOCAL AREA NETWORK) உடன் தொடர்புடையதாக இருந்தது என்கிறார் - இ - மெயில் என்பது டெக்ஸ்ட் மெசேஜ் அல்ல. அது ஒரு சிஸ்டம். இ - மெயிலில் உள்ள INBOX, OUTBOX, FROM, TO, SUBJECT, CC, BCC, DATA, BODY, FORWARD, REPLY எல்லாம் தான் உருவாக்கியவை என்பதையிட்டு அவர் பெருமை அடைகிறார் - அதற்குப் பிறகு மசாசூஸெட்ஸ் இன்ஸ்டிடியூட் ஆஃப் டெக்னாலஜி'யில் (MIT) மேற்படிப்புக்காகச் சென்ற அவர். மிக அதிகமான திறமையுள்ள, கண்டுபிடிப்புகள் செய்யும் மாணவர்களை அந்தக் கல்லூரி ஆண்டு தோறும் அடையாளம் காட்டிச் சிறப்பிக்கும். 1980 இல் 1,040 மாணவர்கள் பிடித்தனர். இ - மெயிலைக் கண்டுபிடித்ததற்காக, அப்படி அடையாளம் காட்டிச் சிறப்பிக்கப்பட்ட நான்கு மாணவர்களில் தானும் ஒருவன் என்கிறார்.

தனது கண்டுபிடிப்புக்கான காப்புரிமையை வாங்க 1982 இல் அமெரிக்காவின் காப்புரிமை அலுவலகத்தை அணுகியவருக்கு அதற்கான விண்ணப்பத்தை பூர்த்தி செய்வது எப்படி என்று ஆலோசனை கூறக் கூட அப்போது யாரும் இல்லை என்கிறார். தனக்கு அப்போது 19 வயதுஎன்றும் 1982 ஒகஸ்ட் 30 இல் இ - மெயிலைக் கண்டுபிடித்ததற்காகஅவருக்கு காப்புரிமை கிடைத்தது.

தைம்சு மாகசீனின் 2011 ஆண்டு நவம்பர் இதழில் தெக்லாண்டு என்ற பகுதியில் தகு ஆமவுத்து நிகழ்த்திய The Man Who Invented Email என்னும் நேர்காணலில் எப்படி அய்யாதுரை உருவாக்கிய மென்கலன் இன்று நாம் அறியும் மின்னஞ்சல் என்பதைத் தோற்றுவித்தது என்று கூறினார். அந்த நேர்காணலில், புரூக்கேவன் தேசிய ஆய்வகத்தில் அணுக்கள் அறிவியலாளராக இருந்த இலசிலி மைக்கேல்சன் என்பவர் மின்னஞ்சல் உருவாக்கும் கருத்தை அய்யாதுரைக்குச் சொல்லி செயல்படுத்தச் சொன்னார் என்றும் விளக்கியுள்ளார். தாள்களில் அனுப்பப்பட்ட மெமோ எனப்படும் குறிப்புகளை மின்வழியாக அனுப்பும் முறையை உருவாக்க வேண்டும் என்று பணித்தார். இதனைச் செயல்படுத்த வேண்டியது உன் பொறுப்பு. இதனை இதற்கு முன்பு யாரும் செய்ததில்லை என்றும் கூறியுள்ளார் .




அய்யாதுரை வழங்கிய ஆவணங்களையும், மூல கணிநிரல்களையும் பெப்ரவரி 2012 இல் சுமித்து சோனியன் அமெரிக்க வரலாற்றுத் தேசியக் கண்காட்சியகம் பெற்றுக்கொண்டது.

அய்யாதுரையின் கூற்றுகள் பல செய்தி ஊடகங்களின் பதிவுகளில் திருத்தங்களையும், தொழில் உள்ளகப் பார்வையாளர்களின் மறுப்புரைகளையும் வெளிக்கொணர்ந்தன. இதனால் சுமித்துசோனியன் நிறுவனம், அய்யாதுரைதான் முதலில் மின்னஞ்சல் (இமெயில், EMAIL) என்பதைக் கண்டுபிடித்தார் என்று தாங்கள் முடிவுகட்ட வரவில்லை என்றும், ஆனால் அவர் வழங்கிய ஆவணங்கள் கணினிக் கல்வி, மருத்துவத்தில் கணினியின் பயன்பாடு முதலியவற்றில் வரலாற்றில் குறிப்பிடத்தகுந்தவை என்றும் விளக்கம் அளித்தனர்.

சிவா அய்யாதுரை எம். ஐ.டியில் இளநிலை பட்டப்படிப்புப் படிக்கும் பொழுது அவருக்குப் பேராசிரியராக இருந்த நோம் சோம்சுக்கி என்பவர் அய்யாதுரையின் கண்டுபிடிப்பை மறுத்துரைப்பவர்களைச் சாடுகின்றார். தொழில் உள்ளகப் பார்வையாளர்கள் எழுப்பும் குழந்தைத்தனமான அடம்பிடிப்புகளாலும் குழப்பம் உண்டாக்குவதாலும் உண்மைகளில் இருந்து திசை திருப்ப இயலாது என்று கூறுகின்றார்.

1976 ஆம் ஆண்டு காப்புரிமைச் சட்டத்தின் கீழ், வெளியிடப்பட்ட கருத்து காக்கப்பட்டது. ஐக்கிய அமெரிக்கக் காப்புரிமை அலுவலகத்துக்கு சமர்ப்பித்த ஆவணங்கள் கனநிரல்களின் அடிப்படையிலும், சுமித்து சோனியன் நிறுவனத்துக்கு அளித்த ஆவணங்களின் அடிப்படையிலும் அய்யாதுரைதான் 'email' என்னும் சொல்லை உருவாக்கினார் என்றும் அலுவலகங்களுக்கு இடையே நிகழ்ந்த அஞ்சல் முறையை ஒருங்கிணைத்த முறையில் மின் முறையில் வடித்தார் என்பதும் உறுதி என்கிறார்.

ஆனால் பலர் தாங்கள்தாம் இ - மெயில் கண்டுபிடித்தோம் எனக் கூறிக் கொள்கின்றனர். ஆனால் நான் இ -மெயில் கண்டுபிடிக்க செய்த முயற்சிகளைப் பார்த்த தவர்கள் இருக்கிறார்கள். அவர்களில் ஒருவர் உலக அளவில் புகழ்பெற்ற மொழியியல், தத்துவத்துறைப் பேராசிரியர் நோம் சாவ்ஸ்கி. நான்தான் இ - மெயில் கண்டுபிடித்தேன் என்று அவர் பகிரங்கமாக அறிவித்து வருகிறார். நான் கண்டுபிடிப்பதற்கு முன்பு இ மெயில் என்ற சொல் உலகத்தில் எந்த அகராதியிலும் இல்லை. இ - மெயிலை நான் கண்டுபிடிக்கவில்லை என்று சிலர் கூறுவதற்குக் காரணம், 1. நான் ஓர் இந்தியன், 2. தமிழன், இவற்றைத் தவிர வேறு எந்தக் காரணமும் எனக்குத் தெரியவில்லை என்று கவலை அடைகிறார் சிவா அய்யாதுரை.



(இன்று காந்தி ஜயந்தி. அதையொட்டி இக்கவிதை பிரசுரமாகின்றது)

## வையமெலாம் வணங்கும்படி வாழ்ந்துவிட்டார் காந்திமகான்!

சத்தியத்தைக் கையெடுத்தார்
சமத்துவத்தின் வழிநடந்தார்
சித்தமெலாம் சமூகத்தை
தினமெண்ணி அவரிருந்தார்
உத்தமராய் வாழுதற்கு
உழைத்திட்டார் காந்திமகான்
உலகமெலாம் மகாத்மாவாய்
உயர்ந்திட்டார் காந்திமகான்!

ஈரமுடை நெஞ்சுடையார்
வீரமுடன் நடைபோட்டார்
தூரநோக்குப் பார்வையுடன்
தொடக்கிட்டார் பணியனைத்தும்
கோரமுகம் கிழித்தெறிந்தார்
கொதித்தவரை குளிர்வித்தார்
பாரதத்தாய் மனமகிழும்
பாதையிலே யவர்சென்றாரே!

பட்டமவர் பெற்றிருந்தார்
பதவிகளை யவர்வெறுத்தார்
கிட்டவரும் ஆசைகளை
வெட்டியே யவரெறிந்தார்
கொட்டமுடன் வந்தவரை
குழந்தையென மாற்றினார்
குவலயமே போற்றுதற்கு
குறியானார் காந்திமகான்!

தேர்ந்தெடுத்த பாதையிலே
தெளிவாக அவரிருந்தார்
தெய்வமதை மனமிருத்தி
தினமுமவர் செயற்பட்டார்
அகிம்சையெனும் ஆயுதத்தை
அவரெடுத்தார் கைகளிலே
ஆணவத்தார் அடிபணிந்தார்
அகிலமெலாம் விழித்ததுவே!

உண்ணாமை என்பதனை
உணர்வுடனே உளங்கொண்டார்
கண்ணாக சுதந்திரத்தை
கண்டாரே காந்திமகான்
கத்தியின்றி ரத்தமின்றி
யுத்தமொன்றை நடத்தியதை
காந்திமகான் பாதையென
காட்டிவிட்டார் உலகினுக்கே!

வரலாற்றை எழுதியவர்
வரலாறாய் ஆகிவிட்டார்
வசதிபல தேடிவந்தும்
வாழ்வாக்க விரும்பவில்லை
வழிகாட்ட அவர்நினைந்தார்
வழிகாட்டி யாகிவிட்டார்
வையமெலாம் வணங்கும்படி
வாழ்ந்துவிட்டார் காந்திமகான்!

- மகாதேவ ஐயர் ஜெயராமசர்மா -
(மேனாள் தமிழ்மொழிக் கல்வி இயக்குநர், மெல்பேண்,ஆஸ்திரேலியா)

# சுகாதாரப் பாதுகாப்பு நடைமுறைகளை மீறினால் நிலைமை மேலும் மோசமாகும்

## வட மாகாண சுகாதாரப் பணிப்பாளர் ஆ. கேதீஸ்வரன் எச்சரிக்கை



ஊரடங்குச் சட்டம் நீக்கப்பட்ட நிலையில், பொதுமக்கள் சுகாதாரப் பாதுகாப்பு நடைமுறைகளை மீறி ஒன்றுகூடினால், தொற்றாளர்களின் எண்ணிக்கையும் இறப்புகளின் எண்ணிக்கையும் மேலும் அதிகரிக்கக் கூடிய வாய்ப்புகள் இருக்கின்றன என, வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ. கேதீஸ்வரன் தெரிவித்தார்.

அத்துடன், தடுப்பூசி பெற்றவர்களாக இருந்தாலும், சுகாதார நடைமுறைகளைத் தொடர்ச்சியாக பின்பற்றுவது அவசியமாகும் எனவும், அவர் கூறினார்.

யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே, அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்துரைத்த அவர் -

வடக்கு மாகாணத்தில், தற்போது வரை 36 ஆயிரத்து 356 பேர் தொற்றாளர்களாக இனங்காணப்பட்டு உள்ளனர் எனவும் இறப்புகளைப் பார்த்தால் வடக்கு மாகாணத்தில் இன்று வரை 753 இழப்புகள் ஏற்பட்டுள்ளன எனவும் கூறினார்.

அதிலே ஒகஸ்ட் மாதத்தில் மாத்திரம் 208 இறப்புகள் பதிவாகியுள்ளன எனத் தெரிவித்த அவர், ஏனைய மாவட்டங்களைப் போல வடக்கு மாகாணத்தில் ஒகஸ்ட் மாதம் தொடக்கம் செப்டெம்பர் வரை இறப்புகளும் நோயாளர்களின் எண்ணிக்கையும் அதிகரித்துக் காணப்பட்டது எனவும் கூறினார்.

இந்தக் காலப்பகுதியில், இறந்தவர்களின் சடலங்களைத் தகனம் செய்வற்கு இடர்நிலை காணப்பட்டது எனத் தெரிவித்த அவர், 'இந்தக் காலப்பகுதியில் 101 சடலங்களை மின் தகனத்துக்காக வெளிமாவட்டத்துக்கு அனுப்பியிருந்ததாகவும் தற்போது அந்த நிலை மாறி இருப்பதாகவும் கூறினார்.

செப்டெம்பர் மாதம் 15 ஆம் திகதிக்குப் பின்னர் தொற்றாளர்களின் எண்ணிக்கையிலும் இறப்புக்கள் எண்ணிக்கையிலும் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது எனவும் அவர் கூறினார்.

'நாடு முழுவதிலும் பொதுவாக குறைந்துள்ளது. தற்போது வடமாகாணத்தில் இந்தச் சடலங்களை தகனம் செய்ய கூடியதாக நிலைமை காணப்படுகின்றது. எனினும், தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டம் நீக்கப்பட்டுள்ளது.

'எனவே, பொதுமக்கள் சுகாதார பாதுகாப்பு நடைமுறைகளை மீறி ஒன்றுகூடினால், தொற்றாளர்களின் எண்ணிக்கையும் இறப்புகளின் எண்ணிக்கையும் மேலும் அதிகரிக்க கூடிய வாய்ப்புகள் இருக்கின்றன.

'இந்த நோய்த் தொற்றானது பூரணமான கட்டுப்பாட்டுக்குள் வரும் வரை, இந்த நடைமுறையை தொடர்ந்து செயற்படுத்துவது சிறந்தது'- எனவும் கேதீஸ்வரன் தெரிவித் தார்.

# ரணிலும் சஜித்தும் இணைய வேண்டும் இராதாகிருஷ்ணனின் விருப்பம் இதுவாம்

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவும், ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாஸவும் இணைந்து செயற்பட வேண்டும் என மலையக மக்கள் முன்னணியின் தலைவரும், ஐக்கிய மக்கள் சக்தியின் நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான வீ. இராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.

ஹற்றனில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர் -

நல்லாட்சியின் போது அரச தலைவர்களுக்கிடையில் முரண்பாடுகள் ஏற்பட்டிருந்தன. அதனால் ஏற்பட்ட விரக்தியாலேயே 69 லட்சம் பேர் மொட்டுக் கட்சிக்கு வாக்களித்தனர்.

ஆனால் இன்று மொட்டுக் கட்சி தலைமையிலான அரசாங்கமும் கொள்கையின்றிச் செயற்படுகின்றது. நாட்டை ஆள்வது அரசாங்கமா அல்லது வர்த்தக மாபியாக்களா எனத் தெரியவில்லை. பல பிரச்சினைகள் உருவாகின்றன.

இந்நிலையில் ஒரு பிரச்சினையை மறைப்பதற்காக மற்றுமொரு பிரச்சினையைத் தோற்றுவிக்கும் தந்திரத்தை அரச தரப்பினர் கையாண்டு வருகின்றனர். குறிப்பாக



உயிர்த்த ஞாயிறு தாக்குதலை மறக்க செய்வதற்காக தற்போது மற்றுமொரு தாக்குதல் பற்றி தகவல் பரப்பப்பட்டு வருகின்றது.

அதேவேளை, மலையக மக்கள் முன்னணியில் இருந்து விலகிச்சென்றவர்கள் மீள கட்சியில் இணையலாம் என திறந்த அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. பலரும் இது தொடர்பில் எம்மைத் தொடர்பு கொண்டுள்ளனர். தவறை உணர்ந்து, கொள்கையை ஏற்று அவர்கள் இணைந்து கொள்ளலாம். கட்சியை விஸ்தரிக்க நடவடிக்கை எடுக்கப்படும். - என்றார்.

# இலங்கையில் 99.5 வீதமானவர்கள் இரண்டு தடுப்பூசிகளும் பெற்றுள்ளனர்

## வைத்தியர் அசேல குணவர்தன தகவல்

இலங்கையில் 30 வயதுக்கு மேற்பட்டவர்களில் 99.5 வீதமானோர் முழுமையாக தடுப்பூசியை பெற்றுக்கொண்டுள்ளனர். ஆனால் 20 முதல் 29 வரையிலான மக்கள் தொகையில் 12.7 வீதம் பேர் மாத்திரமே தடுப்பூசியின் இரண்டு அளவுகளையும் பெற்றுக்கொண்டுள்ளனர் என சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் அசேல குணவர்தன தெரிவித்துள்ளார்.

மேலும், 30 வயதுக்கு மேற்பட்ட மக்கள் தொகையில் கிட்டத்தட்ட 100 வீதமானோர் குறைந்தபட்சம் ஒரு டோஸ் பெற்றுள்ளனர். அதேநேரத்தில் 20 முதல் 29 வயதுக்குட்பட்ட 46 வீதம் மக்களுக்கு ஒரு டோஸ் வழங்கப்பட்டுள்ளது.

அத்துடன் 53 வீதமானோருக்கு இரண்டு டோஸ்களும் வழங்கப்பட்டுள்ளது என அவர் உறுதிப்படுத்தினார்.

இருப்பினும், தடுப்பூசியை செலுத்திக்கொள்வதற்கு



இளைஞர்களிடம் கடுமையான தயக்கம் காணப்படுகின்றமையை அவதானிக்கக் கூடியதாக இருந்ததாக அவர் கூறினார்.

புராண நம்பிக்கைகளால் ஏமாற்றப்படாமல், தடுப்பூசியைப் பெற இளைஞர்களை நாங்கள் தீவிரமாக வலியுறுத்துகிறோம் என அவர் மேலும் தெரிவித்தார்.



# எல்லை மீறும் யானை – மனித மோதல்

- செல்வி.குந்தவி சிவபாலன் -
(4ஆம் வருடம், ஊடகக் கற்கைகள் துறை
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்)

இயற்கை எப்போதுமே மனிதனை ஆச்சரிய மூட்டுகின்றது. ஏதோவொன்றை பருசளித்துக் கொண்டிருக்கிறது. இவற்றிற்கு அப்பால் மனிதனை எல்லாவற்றுடனும் ஒன்றித்து வாழ வைக்கின்றது. இயற்கை ஒருவித உணர்வு, நெருக்கம், ஆத்மார்த்தம். அந்தவகையில் இயற்கை எமக்கருளிய உயிரினப் பரிசு தான் யானைகள். யானைகள் என்றவுடன் பொதுவாக சிறுவர்கள் மத்தியில் பெரிய வரவேற்பு இருப்பது வழக்கம். அவர்களை குதூகலமூட்டும் உயிரியாக அதனை எண்ணுகின்றனர். இதனையும் தாண்டி மனிதனுக்கும் யானைக்கும் இடையே ஒன்றித்து வாழ்வதற்கான பல தேவைப்பாடுகள் காணப்படுகின்றன.



உலகளாவிய ரீதியில் யானைகளை ஆசிய யானைகள், ஆபிரிக்க யானைகள் என வேறுபிரித்துப் பார்க்க முடியும். இரண்டிற்கும் பலவேறுபாடுகள் உண்டு என்பர். உலக வனவிலங்கு நிதியத்தின் கணக்குப்படி உலகளாவிய ரீதியில் இப்போது 4,15,000 ஆபிரிக்க யானைகள் உள்ளன. 40,000 - 50,000 வரை ஆசிய யானைகள் உள்ளன.

ஆசிய யானைகள் எப்போதும் தனிச் சிறப்பு வாய்ந்தவைதான். இதுதான் அவற்றின் அழிவிற்கும் காரணமாய் அமைகின்றன. ஆசிய யானைகளை விட ஆபிரிக்க யானைகள் அளவில் பெரியவை. அத்தோடு ஆசிய யானைகளில் ஆண் யானைகளுக்கு மாத்திரமே தந்தம் வளர்ச்சி பெறும். ஆனால் ஆபிரிக்க யானைகளில் ஆண், பெண் என இரண்டிற்கும் தந்தம் வளர்ச்சியடையும்.

யானைகளைப் பொறுத்தமட்டில் அவை பல விசேட பண்புகளைக் கொண்டிருக்கும். ஒட்டுமொத்தமாக யானைகளை இயற்கையின் உறைவிடம் எனக் குறிப்பிடலாம்.

ஒரு யானை இருந்தால் ஒரு வனத்தினையே உருவாக்கலாம் எனக் கூறுவார்கள். இதற்குக் காரணம் யானையின் சாணமும், அறிவுத்திறமையும் ஆகும். நாடுமுழுவதும் காடுகளில் உள்ள யானைகள் உணவு,தண்ணீர் தேடி தமக்குச் சாதகமான இடத்திற்குக் கூட்டம் கூட்டமாக இடம்பெயரும் தன்மை கொண்டவை. இதனை யானைகள் வலசு போதல் என்று சொல்வார்கள். யானையின் சாணத்தில் தாவரக் கழிவுகள் இருக்கும் இதன்மூலம் ஒரு வனமே உருவாகும். ஒரு காட்டின் உருவாக்கத்திலும் அதன் உயிர்ப்பிலும் விலங்குகளின் பங்கு அளப்பெரியது. அவர்கள் உருவாக்கும் காட்டினை மனிதர்களால் உருவாக்க முடியாது. யானைகளுக்கு அதிக உணவு தேவை. ஒரு நாளைக்கு 200 - 250கிலோ தாவரங்களும் நல்ல குடிநீரும் அவற்றிற்குத் தேவை.

எனவே இங்குதான் பிரச்சினையே ஆரம்பமாகிறது.

உயிரினங்களைப் பொறுத்தவரையில் அவற்றுக்கான சுதந்திரம் அவையிடமே இருக்க வேண்டுமென விரும்புபவை. அது மனிதனானாலும் சரி. இறைவனால் படைக்கப்பட்ட எல்லா உயிரிகளும் இன்னொரு உயிரியில் தங்கியிருக்கும் பட்சத்திலும் கூட அவை தமக்கான சுய அடையாளங்களை ஒருபோதும் விட்டுக்கொடுக்கா.



இயற்கைக்கு விரோதமான முறையில் யானைகள் அழிவடைந்து வரல் இன்றுவரை தொடர்கின்ற பாரியதொரு பிரச்சினையாகும். 1986இல் இருந்து இலங்கை யானை அருகிய இனமாக பன்னாட்டு இயற்கைப் பாதுகாப்புச் சங்கத்தினால் பட்டியலிடப்பட்டது. 60 - 75 வருட கணக்கெடுப்பில் கடந்த மூன்று தலைமுறைகள் 50வீதமாகக்குறைவடைந்து காணப்படுகின்றது. இந்த இனங்கள்வாழ்விட இழப்பு, சீர்கேட்டு நிலை, பிளவு என்பவற்றால் அச்சுறுத்தலுக்கு உள்ளாகியுள்ளன.



இலங்கையில் உடவளவை தேசியப் பூங்கா, யால தேசிய வனம், வில்பத்து தேசிய வனம், மின்னேரியா தேசிய வனம் போன்ற இடங்கள் யானைகள் பாதுகாப்பாக பேணப்படும் சரணாலயங்களாகும்.

வரலாற்றினை நோக்கும் போது யானைகள் உலர்வலயம்,ஈரவலய தாழ்நிலம், குளிரான பனிமலைக் காடுகள் ஆகியவற்றில் காணப்பட்டன. 1830 வரை யானைகள் ஏராளமாகக் காணப்பட்டும்அவற்றைஅழிக்க அரசு ஊக்கமளித்தது. யானைகளை கொல்வோருக்குச் சன்மானமும் வழங்கப்பட்டது. அவற்றின் மறைவுக்கு கோப்பி பயிரிடல், தேயிலை பயிரிடுதலுக்காக காடழிப்பு போன்றன காரணம் காட்டப்பட்டன. மலைப்பகுதியில் வாழ்ந்த யானைகள் 19ஆம், 20ஆம் நூற்றாண்டுகளில் கூட்டங்களாக சிதறடிக்கப்பட்டன. அப்போதிருந்தே யானைகளின் அழிப்பும் முன்னேறிக் கொண்டு செல்லலாயிற்று. இலங்கையில் யானைத் தந்த வர்த்தகம் 2000ஆம் ஆண்டுகளுக்கு மேலான நீண்ட வரலாற்றைக் கொண்டது.


இலங்கையின் யானைத் தந்தத்திற்கு சர்வதேச அளவில் அவ்வளவு கிராக்கியும் கூட. 19,20 ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் பிரித்தானியர் ஆட்சிக் காலத்தில் நினைவுச் சின்ன சேகரிப்பு வேட்டைக்காரர்களினால் சராசரியாக ஒரு நாளைக்கு ஒரு யானை கொல்லப்பட்டது.

இதனையடுத்து இலங்கையின் உள்நாட்டு யுத்த காலத்தில் நிலக்கண்ணி வெடிகளால் யானைகள் அங்கவீனமாகியும் கொல்லப்படுதலுக்கும் உள்ளாகின. 1990ற்கும் 1993ற்கும் இடைப்பட்ட காலத்தில் 165 யானைகள் மட்டும் துப்பாக்கி வேட்டுக் காயத்தினால் இறந்தன. இன்றும் இலங்கையில் யானைத் தந்த வர்த்தகம் செயற்பாட்டிலுள்ளது. கண்டி சட்ட விரோத யானைத்தந்த வர்த்தகத்திற்கான இடமாக அடையாளம் காணப்பட்டுள்ளது.

யானைகளின் அழிவிற்கு மனித சனத்தொகையின் வளர்ச்சியினையே பலரும் பிரதான காரணியாக சுட்டிக்காட்டுகின்றனர். அபிவிருத்தி எனும் போர்வையில் இலங்கையில் மேற்கொள்ளப்படும் இந்த செயற்றிட்டங்கள் பிரதானமாக விலங்குகளினையே பாதிக்கின்றது.

இங்கு நிலத்திற்கான கேள்வி மையக் குறிக்கோளாக உள்ளது. வீதி அபிவிருத்தி, நீர்ப்பாசன அபிவிருத்தி போன்றவற்றினால் யானைகளின் நிலக் குடியிருப்புக்கள் காடழிப்பு எனும் பெயரில் சூறையாடப்படுகின்றன. காடழிப்பினால் வறட்சி, பட்டினி, நீரின்மை, வாழ்விடமின்மை போன்ற காரணிகளால் யானைகள் தங்கள் தேவைகளை நிறைவேற்றிக் கொள்ளும் பொருட்டு மனிதர்களின் குடியிருப்புகளுள் உட்புகுகின்றன. உண்மையில் அவை தங்களது பூர்வீகக் குடியிருப்புகளினை தேடிச் செல்கின்றன எனக் கூறுவதே இங்கு பொருத்தமானதாகும். விவசாய நிலங்களினை சேதப்படுத்துகின்றன, மனிதர்களின் குடியிருப்புகளை அழிக்கின்றன. இவற்றினால் மின்சார வேலிகள் அமைக்கப்பட்டு அவை துன்புறுத்தப்படுகின்றன. இதற்கான அடிப்படைக் காரணமாக பலராலும் சுட்டிக்காட்டப்படுவது யானைகளின் வலசைப் பாதைகளைத் துண்டிப்பதே என்பதாகும்.

(14ஆம் பக்கம் பார்க்க...)




- எஸ். அன்ரனி நோர்பேட் -
(முன்னாள் சிரேஷ்ட பேராசிரியர்,
கொழும்புப் பல்கலைக்கழகம்)

# இலங்கையில் புவிநடுக்கங்களும் பாரிய நீர்த்தேக்கங்களும்


## ஓர் எதிர்காலவியல் நோக்கு

புவியின் உட்பகுதியில் காணப்படும் பாறைகளில் இடம்பெறும் சடுதியான தாக்கங்களினால் அல்லது முறிவுகளினால் உருவாகும் அலைகள் புவியினூடாக எல்லாப் பகுதிகளையும் நோக்கிப் பரவுகின்றன. அக விசைகளினால் புவியின் உட்பகுதிகளில் நிகழும் இவ்வாறான முறிவுகள் அல்லது அசைவுகளே புவிநடுக்கங்களாகும். பாறைகளில் சடுதியாக ஏற்படும் இடமாற்றத்தின் மூலம் அதிர்வு அலைகள் உருவாக்கப்படலாம். ஒரு சிறிய வெடிப்புக் கூட நீண்ட தூரத்திற்குப் புவியினூடாக அலைகளை ஏற்படுத்தும். பாறைகளின் குறைகளில் ஏற்படும் நழுவுதலே புவிநடுக்கத்திற்கான பிரதான காரணமாக இருந்தாலும் சில புவிநடுக்கங்கள் எரிமலைச் செயற்பாட்டுடன் தொடர்புடையனவாகவும் உள்ளன. பாறைகளின் குறைகளில் (Fault) ஏற்படும் புவி நடுக்கங்கள் தகட்டோட்டப் புவி நடுக்கம் எனப்படும்.

புவியில் ஆயிரக்கணக்கான நடுக்கங்கள் வருடா வருடம் ஏற்பட்டு வருகின்றன. அவற்றுள் சில நடுக்கங்களே வலிமை வாய்ந்தனவாகவும் குடித்தொகை அதிகமாகக் காணப்படும் பகுதிகளில் உயிரிழப்புக்களை ஏற்படுத்தக் கூடியனவாகவும் இருக்கின்றன. புவி நடுக்கங்களிலிருந்து உலகின் எப் பகுதியும் விலகி அமைந்திருக்கவில்லை. ஆனால் சில இடங்களில் அவை பலவீனமாக அமைந்திருப்பதினால் தாக்கங்கள் குறைவாக இருக்கின்றன. வருடா வருடம் ரிச்டர் அளவு மூன்றுக்குக் குறைவான ஏறக்குறைய மூன்று லட்சம் புவிநடுக்கங்கள் உலகின் பல பகுதிகளிலும் ஏற்படுகின்றன. ஆனால் எட்டு ரிச்டர் அளவிலான புவிநடுக்கங்கள் நீண்ட காலத்துக்கொரு முறையே ஏற்படுகின்றன.




1960 ஆம் ஆண்டின் பின்னரே புவிநடுக்கங்களின் அமைவிடங்கள் பற்றிய விவரங்கள், புவியதிர்வு வலயங்கள் மற்றும் தகட்டு எல்லைகளுடன் தொடர்புபடுத்தப்பட்டு ஆராயப்பட்டன. 1960 இல் ஹரிஹெஸ் (Harry Hess) என்பவர் 'உருகிய பாறைக் குழம்பானது மத்திய சமுத்திரத் தொடர்களுக்குக் கீழே இருந்து மேல் நோக்கி வந்து உறைந்து சமுத்திரஓட்டினை உருவாக்குகின்றது' என்றார். இப் புதிய கடற்தரையானது மத்திய தொடரிலிருந்து விலகிச் செல்லும் செயன்முறையையே இன்று கடல் - தரை பரவுதல் (Sea-floor Spreading) என அழைப்பர். புவியோட்டு விருத்திக்குரிய தகடுகள் பற்றிய சிந்தனைகளின் விருத்திக்கு இக் கருத்தியலே முக்கிய படியாக அமைந்திருந்தது. 1960 இன் பிற்பகுதியில் 'குளோமர் சாலன்ஜர்' (Glomar Challenger) என்னும் கப்பலானது சமுத்திரத் தரையில் துளையிடும் பணிகளை ஆரம்பித்தது. சமுத்திரத்தில் ஏறக்குறைய ஒரு மைல் தூரம் வரை துளையிட்டு அங்குள்ள பாறைகள் மற்றும் அடையல்களை வெளிக்கொணர்ந்து புவி விஞ்ஞானிகளின் ஆய்வுக்கு வழங்கியது. கடல் தரையின் அடையல்களின் ஊடாக எரிமலைக் குழம்புப் பாறைப் படை (Basalt Layer) வரைக்கும் துளையிடப்பட்டு அப் படையின் நிலைமைகள் அறிந்து கொள்ளப்பட்டன. 1960 மற்றும் 1970 களில் கடல் தரை பற்றிய கண்டுபிடிப்பும், கண்ட நகர்விற்கான பழங்காந்தவியல் ஆதாரங்களும் புவிச்சரிதவியலில் ஒரு விஞ்ஞானப் புரட்சியையே ஏற்படுத்தின. இக்காலத்தில் மேற்கொள்ளப்பட்ட புதிய ஆய்வுகளில் தகடுகள் பற்றிய விளக்கங்கள், தகட்டு எல்லைகளின் வகைகள் பற்றிய வரைவிலக்கணங்கள், குழப்பமான தகட்டு அசைவுகள், எரிமலைகள், புவிநடுக்கங்களுடன் தொடர்பான தகட்டு அசைவுகள், மலைத்தொடர்கள், கடல் குன்றுகளின் சங்கிலித் தொடர்கள், கடந்தகால தகட்டு அசைவுகளின் வரலாறு போன்றவை தெளிவுபடுத்தப்பட்டன. இவற்றிலிருந்து தான் நவீன தொழில்நுட்பக் கோட்பாடு தோற்றம் பெற்றது.




புவியின் கற்கோளமானது ஒரு திண்மமான ஓடாக (crust) இருப்பதுடன் ஏறக்குறைய இருபது தகடுகளைக் கொண்டதாக ஒன்றுடனொன்று தொடர்புபட்ட முறையில் நகர்ந்தும் செல்வதாகக் கருதப்படுகின்றது. இத் தகடுகளுக்கிடையிலான எல்லைகளைப் புவிநடுக்கங்களின் பரம்பல் எல்லையிட்டுக் காட்டுகின்றது. அத்துடன் புவியைச் சுற்றிவரும் பூகோள இடநிலைப்படுத்தல் முறைமைத் (Global Positioning System-GPS) தொழில்நுட்ப செய்மதிகள் மூலம் புவிச்சரிதவியலாளர்கள் தகட்டசைவைத் துல்லியமாகக் கணிக்கும் வகையிலான முன்னேற்றங்களை இன்று பெற்றுள்ளனர்.


கண்ட நகர்விற்கான ஆதாரங்களைத் தேட முனைந்த விஞ்ஞானிகள் ஆழ்கடல் சமுத்திரத் தரை பற்றிய ஆய்வுகளில் கவனம் செலுத்தினர். அத்திலாந்திக் சமுத்திரத்தின் மத்தியில் காணப்படும் கடற்கீழ் மலைத் தொடர் (Mid-Oceanic Ridge) ஐஸ்லாந்தின் தென்பகுதியிலிருந்து அந்தாட்டிக் வரை செல்கின்றது. இவை தொடர்பான தகவல்களுக்கு கடற்தரையின் ஆழத்தில் காணப்படும் வேறுபாடுகள் பற்றிய தகவல்கள் தேவையாக இருந்தன. 1950 -60 காலப் பகுதியில் சமுத்திரத்தின் ஊடாக நவீன சோனார் கருவிகளைக் காவிச் செல்லும் கப்பல்களின் எண்ணிக்கை அதிகரித்ததினால் ஆழ்கடல் ஒலிமானியிலிருந்து சான்றுகள் பெறப்பட்டன. இச் சான்றுகளின் அடிப்படையிலேயே சமுத்திரத் தரைகள் பற்றிய உலகப் படம் தயாரிக்கப்பட்டு வெளியிடப்பட்டது. இதன் மூலம் மத்திய பாறைத் தொடர் எல்லா சமுத்திர வடிநிலங்களிலும் காணப்படுவதாக எடுத்துக்காட்டப்பட்டது.

புவி ஓடானது இச் சமுத்திரப் பாறைத் தொடர்களினாலேயே தகடுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. இவை கற்கோளத் தகடுகள் (Lithospheric Plates) எனப்படும். திண்மமான இத் தகடுகள் அசையும் தன்மையைக் கொண்டிருப்பதனால் அவை புவியோட்டு விருத்திக்குரிய தகடுகள் (Tectonic Plates) எனக் கூறப்படுகின்றன. புவியோடு ஏழு பிரதான தகடுகளாகப் பிரிக்கப்படுகின்றது. அத்துடன் நஷ்கா, கொக்கோஸ், கரீபியன், ரிவேரா, ஸ்கோசியா, கோர்டா, பிலிப்பைன்ஸ், அராபியன் போன்ற சிறிய தகடுகள் பலவும் பெரிய தகடுகளுக்கிடையில் காணப்படுகின்றன. பெரும்பாலான சிறிய தகடுகள் யாவும் புவி ஓட்டின் சமுத்திரத் தரைப் பகுதியிலேயே அமைந்துள்ளன. பிரதான ஏழு தகடுகளில் ஒன்றே ஆஸ்திரேலிய - இந்தியத் தகடாகும். இத்தகட்டுப் பகுதியில் ஆஸ்திரேலியா மற்றும் இந்திய உபகண்டப் பகுதி, அதனுடன் சார்ந்த சமுத்திரப் பகுதிகளும் உள்ளடக்கப்பட்டுள்ளன. இந்து சமுத்திரத்தின் பெரும்பாலான பகுதிக்குக் கீழ் காணப்படும் தகடானது பல்வேறு திசைகளிலும் இழுக்கப்படும் நிலையில் உள்ளது. கிழக்குப் பகுதி சுண்டாக் கடலின் கீழ் வழுக்கிச் செல்கின்றது. வடக்குப் பகுதி இமாலயப் பகுதியுடன் இறுகி நிற்கின்றது. இதனால் இவ் வடிநிலத்தின் நகர்வு வேகம் வேறுபாடாகக் காணப்படுகின்றது. இத் தகட்டிலேயே இலங்கையும் அமைந்துள்ளது.

### இலங்கையில் புவிநடுக்கங்கள்

இலங்கைச் சூழலில் இடம்பெற்ற புவிநடுக்கங்களின் வரலாற்று ரீதியான தரவுகளைப் பார்க்கும் போது 1615 ஏப்ரல் 14 இல் ஏற்பட்ட புவிநடுக்கமே மிக முக்கியமானதாகக் கருதப்படுகின்றது. கொழும்பில் ஏற்பட்ட இப் புவிநடுக்கத்தினால் 200 வீடுகள் தரைமட்டமாகின. 2,000 பேர் வரையில் இறந்தனர். கொழும்பு துறைமுக நகரின் மேற்குப் பக்கச் சுவர் இடிந்து விழுந்தது. 1615 ஆம் ஆண்டிற்கு முன்னர், பழம் புவிநடுக்கவியலாளர்களின் ஆய்வுகளின் படி இந்திய உபகண்டத்தில் தகடுகளுக்கு மத்தியில் புவிநடுக்கம் ஒன்று 1063 இல் ஏற்பட்டுள்ளமையை அறியமுடிகின்றது. 1615 - 1800 காலத்தில் புவிநடுக்கங்கள் எதுவும் இலங்கையில் ஏற்படவில்லை. ஆனால் 1882, 1924, 1938, 1944 ஆகிய ஆண்டுகளில் புவிநடுக்கங்கள் இடம்பெற்றுள்ளன. 1938 இல் ஏற்பட்ட புவிநடுக்கம் மிக முக்கியமானதாகக் கருதப்படுவதுடன் புவிநடுக்கத்தின் மேன் மையம் (Epicenter) மன்னார் பள்ளத்தாக்கு வலயத்தின் மத்திய அச்சில் இடம்பெற்றிருந்தது. இலங்கைச் சூழலில் இடம்பெற்ற 300 க்கு மேற்பட்ட புவிநடுக்கப் பதிவுகளைப் பகுப்பாய்வு செய்யும் போது மன்னார் பிளவுப் பள்ளத்தாக்கு வலயம் (Rift Zone) மற்றும் கொமரின் பாறைத் தொடர் (Comorin Ridge) ஆகிய இரண்டும் முக்கியமானவையாகக் கருதப்பட்டன. கடல் மட்டத்திற்குக் கீழ் 10 - 15 km ஆழத்தில், 475 வருட மீள்நிகழ்வுக் காலத்தினைக் கொண்டதாக 6.9m அளவுத்திட்டத்தில் நிலநடுக்கமொன்று எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய ஆற்றலை இப் பகுதி கொண்டுள்ளதென எதிர்வு கூறப்பட்டுள்ளது.

1983 பெப்ரவரிக்கும் 1984 ஓகஸ்டுக்கும் இடையில் நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் 47 நுண் புவிநடுக்கங்கள் (Micro earthquacks) இடம்பெற்றுள்ளன. இவை ரிச்டர் அளவுத்திட்டத்தில் 0.2 - 2.25 ஆகக் காணப்பட்டன. 2020 இல் விக்டோரியா அணைக்கு அண்மித்த பகுதிகளில் ஒன்பது புவியதிர்வுகள் பதிவு செய்யப்பட்டன. 2021 ஒகஸ்ட் 16 இல் இலங்கையின் தெற்காக 1200 km தூரத்தில் இந்து சமுத்திரத்திலும், செப்ரெம்பர் 12 இல் அம்பாந்தோட்டையிலிருந்து 120 km தூரத்திலும் நில அதிர்வு ஏற்பட்டது. 2020 ஆகஸ்ட் 29 இல் 3.5 பருமன் அளவு கொண்ட புவியதிர்வு ஒன்று திகண பகுதியில் பதிவு செய்யப்பட்டது. இக் காலத்தின் பின்னர் ஏற்பட்ட எல்லா அதிர்வுகளும் விக்ரோறியா அணையைச் சூழவுள்ள புவியதிர்வு உணர்விகளில் பதிவு செய்யப்பட்டது. இந்நிகழ்வுக்குப் பின்னர் செப்ரெம்பரில் இரண்டு அதிர்வுகளும், நவம்பரில் இரண்டு அதிர்வுகளும் இடம்பெற்றன. 2020 ஒகஸ்ட் 29 இருந்து 2020 நவம்பர் 30 வரையிட்ட காலத்தில் சிறியளவிலான புவியதிர்வுகள் கண்டிப் பிரதேசத்தில் குருதெனிய, ரஜமெல்ல, தலாத்து ஓயா, ஹரகம மற்




றும் அனுராகம பகுதிகளில் ஐந்து தடவைகள் பதிவு செய்யப்பட்டன. எனவே, இலங்கை நில அதிர்வு கொண்ட பிரதேசமென்பதை எவரும் மறுக்க முடியாது. 2021 ஒகஸ்டில் ஏற்பட்ட நில அதிர்வு (4.3) களுத்துறை, மகரகம, மொறட்டுவ, பத்ரமுல்ல தெற்கு, தெகிவளை போன்ற பகுதிகளில் உணரப்பட்டமை குறிப்பிடத்தக்கது. கடந்த இரண்டு வருடங்களாக இலங்கையிலும், அதனை அண்மித்த சமுத்திரப் பகுதிகளிலும் ஏற்பட்டு வரும் மிகச் சிறிய அளவிலான பல நில அதிர்வுகளினால் மக்கள் மத்தியில் பயவுணர்வு தோன்றியுள்ளமை குறிப்பிடத்தக்கது. இதனால்தான் இலங்கையின் பல பகுதிகளிலும் புவிநடுக்கப்பதிவு கருவிகளை (Seismograph) அரசாங்கம் நிறுவி வருகின்றது.

(மிகுதி நாளை தொடரும்...)

# தீருமா பெண் கல்விப் பசி?

**இ.ஷயனுதா**
**(4 ஆம் வருடம், ஊடகக் கற்கைகள் துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.)**

அடுப்பூதும் பெண்களிற்கு படிப்பெதற்கு? என்ற ஆழமான பொய்மை சமுதாயத்தின் ஆணி வேரில் ஊன்றியிருக்கின்றது. அந்த பொய்மையின் சாயல் இன்னுமும் அழியவில்லை.

காலம் மாறிவிட்டது, முன்னைய காலம் போல இப்போது இல்லை, எவ்வளவோ முன்னேற்றங்கள் நடைபெற்றுள்ளன, நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன என்ற வார்த்தைகளின் செயல் வடிவத்தினை ஒருசில விடயங்களில்தான் காண முடிகின்றது. அதில் பலகாலமாக சொல்லப்படும் ஒருவிடயம்தான் பெண் கல்வி. பெண்களிற்கான கல்வியில் சமவுரிமை கொடுக்கப்பட்டுவிட்டது, பெண்கள் கல்வியில் முன்னேறிவிட்டார்கள் என்ற பார்வையை எப்படி முற்றுமுழுதாக ஏற்றுக்கொள்ள முடியும்? இன்னமும் பெண்களின் கல்வியில் பின்னடைவு இருப்பதனை யாரும் கண்டுகொள்ளவில்லையா? ஒரு கிராமமாக இருக்கட்டும், அல்லது ஒரு பிரதேசமாக இருக்கட்டும், எங்கோ ஓர் மூலையில் பெண்ணின் கல்வி கேள்விக்குறியாகக் காணப்படும் நிலை இன்னமும் மாறவில்லை.

அரசியல், பொருளாதாரம், பண்பாடு, கலாசாரம் இவையனைத்தும் வரிசை கட்டி நிற்காத இடங்கள் என்று எதுவுமில்லை. இந்த விடயத்திலும் இவைக்குக் காத்திரமான பங்குண்டு. 1931இல் இலங்கையில் எல்லா மக்களிற்குமான கல்வி என்னும் சட்டம் கொண்டுவரப்பட்டதிலிருந்து இன்று வரை கல்வியில் - முக்கியமாக பெண்களின் கல்வியில் - பாரபட்



சம் தாராளமாகக் காட்டப்படுகின்றது. நம் நாட்டின் கல்வியைப் பொறுத்த வரை பெண்கள் 93 வீதம் கல்வியறிவு கொண்டவர்கள் என்று கூறப்படும் அதே வேளை அந்த சதவீதம் எல்லா பிரதேசங்களிலும் சமமாக இல்லை என்றும் கூறப்படுகின்றது. இதற்குக் காரணம் என்ன? அரசியலா? பொருளாதாரமா? இல்லாவிடின் அதன் முக்கியத்துவம் வெளிப்படவில்லையா?

அந்தவகையில் செல்வாக்கு மிகுந்த பிரதேசங்களிற்கு சேவைகள் கிடக்கப்பெறுவதும் செல்வாக்கற்ற பிரதேசங்கள் கவனிக்கப்படாமல் இருப்பதுவும் இங்கு வழமைதானே. இலங்கை அரசாங்கத்துடன் யுனிசெவ் நிறுவனம் இணைந்து நடாத்திய ஆய்வில் இலங்கையில் மலையகப் பகுதிகளில் ஆண் பிள்ளைகளை விட பெண் பிள்ளைகள் ஆரம்பப் பாடசாலை





மட்டத்திலேயே தமது கல்வியை இடைநிறுத்துகின்றனர் எனத் தெரிகின்றது. இவ்வாறான மக்களிற்கு கல்வி பற்றிய போதிய விழிப்புணர்வினை கொடுக்கவில்லை என்ற ஆதங்கம் ஒரு பக்கம் இருக்க, அங்குள்ள பிள்ளைகள் உரிய முறையில் கல்வியை தொடர சரியான மற்றும் தேவையான சேவைகள் வழங்கப்படவில்லை என்ற உண்மை அந்த ஆதங்கத்தை இன்னமும் அதிகரிக்கின்றது.

தென்னாசிய நாடுகளில் பெண்களிற்கென ஆரம்பிக்கப்பட்ட முதலாவது பாடசாலை எனும் பெருமையைக்கொண்டிருப்பதும் நமது நாடான இலங்கைதான். 1813 இல் யாழ் பெண்களிற்கான பாடசாலை அமெரிக்க மிஷனால் தொடங்கப்பட்டது. இவ்வாறான ஓர் அடித்தளம் இடப்பட்டும் மகளிர் கல்வி இன்னமும் பூரணப்படுத்தப்படவில்லை. இன்று பெண்களிற்கென அநேக பாடசாலைகள் இங்கு இயங்குகின்றன. ஆனால் கல்வியைத் தொடராத பெண்களின் எண்ணிக்கையென்பது கணிசமான அளவாகத்தான் உள்ளது. அவ்வாறே பாடசாலைகளில் கல்வியைத் தொடரும் பெண்களில் அதிகமானோர்க்கு தம்முடைய உயர்கல்வியில் தாம் விரும்பிய துறையைத் தேர்ந்தெடுப்பதென்பது பெரும் சவாலாகவே உள்ளது.

குறிப்பாக பல்கலைக்கழகங்களில் இந்த சவாலை அதிகம் எதிர்கொள்ளும் தன்மை காணப்படுகின்றது. இதற்கு சிறந்த உதாரணம் ஊடகக் கற்கைகள் துறை. இலங்கையில் குறித்த ஒருசில பல்கலைக்கழகங்களில் மாத்திரமே இந்த ஊடகக்கற்கைகள்துறைகாணப்படுகின்றது. இவ்வாறிருக்க இந்த துறையினை தெரிவுசெய்யும் பெண்களின் எண்ணிக்கையென்பது ஒப்பீட்டளவில் குறைவாகவே உள்ளது. இதற்கு சமுதாய அழுத்தம் முக்கிய காரணம். பெண்கள் ஊடகத்துறைக்குள் பிரவேசிப்பது பொருத்தமல்ல என்ற போர்வையை போர்த்தியுள்ள மேதைகளின் திணிப்பு அது. அதனையும் தாண்டி இத் துறையை தெரிவு செய்து பட்டப்படிப்பை முடிக்கும் பெண்களில் சரிபாதிப் பேர் கூட ஊடகத்துறையில் பணிபுரிய செல்ல மறுக்கும் நிலை காணப்படுகின்றது. ஊடகங்களில் வேலை செய்வதென்பது அச்சம் என்றொரு பார்வை ஒருபுறம் இருக்க சில ஊடக நிறுவனங்களில், வேலைத்தளங்களில் காட்டப்படும் பால்நிலைப் பாரபட்சமும் இந்த பின்னடைவிற்கு ஒரு காரணமாகவுள்ளது.

இவை மட்டும் அல்லாமல் ஒவ்வொரு கால கட்டத்திலும் ஏதோ ஒரு காரணத்தினாலோ அல்லது கட்டாயத்தினாலோ பெண்களின் கல்வி நம் நாட்டில் பாதிக்கப்பட்டுக்கொண்டுதான் இருக்கின்றது. இதற்கு எல்லோரும் அறிந்த உதாரணம் இலங்கையின் உள்நாட்டுப் போர். குறித்த போர்க்காலச் சூழலில் அதிகமாக வடக்குப் பகுதியில் எண்ணிலடங்காப் பெண்களின் கல்வி இடைநிறுத்தப்பட்ட விடயம் வேதனைக்குரியது. இன்று அந்தப் பெண்களின் நிலையைத் திரும்பிப் பார்க்கும் போது ஏதோ ஒரு வாழ்வாதாரத்தினை மட்டுமே நம்பி வாழ்க்கையை கொண்டு செல்லும் துயரம் படர்ந்துள்ளது.

காரணங்கள் உருவாகின்றனவா? இல்லை உருவாக்கப்படுகின்றனவா? கல்வியிலும் அறிவிலும் சாதனை படைத்த எத்தனை பெண்களை முன்னுதாரணமாகக் கூறினாலும் இன்னமும் தேக்க நிலையென்பது தொடர்ந்துகொண்டேதானே இருக்கின்றது. பெண்ணானவள் தலைகுனிய நேரிட்டால் அது ஒட்டு மொத்த சமுதாயமுமே தலைகுனிவது போன்றதாகும். அதே பெண்ணானவள் தலை நிமிரும் போது ஒட்டு மொத்த சமுதாயமுமே தலை நிமிர்கின்றது. ஏனெனில் பெண் என்பவள் சமுதாயத்தின் ஆணி வேராக உள்ளவளாவாள்.

சமுதாயத்தைப் பொறுத்தவரை குடும்பத்தைக் கவனிக்கவும் பிள்ளைகளைப் பராமரிக்கவும் வீட்டை நிர்வகிக்கவும் பெண் வேண்டும். ஆனால் கல்வியில் முன்னேறி, சாதனை படைத்து, பெருமையைத் தேடித் தருவதற்கு அவளிற்குத் தடை விதிக்கின்றது. மனுதர்ம சாஸ்திரத்தில், வயது வந்த பெண் ஆண் துணையற்று வெளியே போகக் கூடாது என்று வலியுறுத்துகின்றது. இது எப்படிச் சாத்தியமாகும்? இவ்வாறான சாஸ்திரங்களை நம்பியவர்களின் நிழல் பிரதிகள் இன்னமும் வாழ்ந்து கொண்டுதான் இருக்கின்றனர். இன்னமும் சாஸ்திரம் மற்றும் சம்பிரதாயத்தின் பெயரல் பெண்கள் ஒடுக்கப்பட்டுக்கொண்டுதான் இருக்கிறார்கள்.

பெண்ணானவள் கல்வி கற்றே தீர வேண்டும்





என்னும் பக்குவத்தினையுடைய பெற்றோர்கள் எமக்குள்ளே உருவாக வேண்டியது அவசியம். பெண் கல்வி அறிவானது ஒரு காத்திரமான அறிவுத் தளத்தில் சமுதாயம் வளர உதவுகின்றது. ஒரு சமுதாயம் எப்படி வளர்கின்றது என்பதனை அவதானிக்க, அந்நாட்டின் பெண் கல்வியும் அந்தக் கல்வி மூலம் பெண்ணானவள் சமுதாயத்திற்குச் செய்யும் பலதரப்பட்ட பணிகள் மூலமும் அளவிட முடியும். இது மட்டுமல்லாமல் ஓர் ஆண் கற்பதனால் அவன் மட்டுமே கற்கின்றான். ஆனால் ஒரு பெண் கற்பதனால் மொத்த சமூகமுமே கற்கிறது என்ற கூற்றின் ஆழம் எம்மவர்க்கு புரிய வேண்டியது அவசியம். தொட்டிலை ஆட்டும் கை தொல்லுலகை ஆளும் கை என்பதை உலகிற்கு உரக்கச் சொல்வோம்.



# தற்போதைய நவீன விஞ்ஞான உலகத்தில் வியாபாரப் பொருள்களாக மாறும் பிள்ளைகள்



சட்டத்தரணி ஜெகநாதன் தற்பரன்
(சட்டமுதுமாணி - LL.M)

(நேற்றைய தொடர்ச்சி)

## குடும்பக் கொள்கை திடமானதாக இல்லை

சமகாலத்தில் தெற்காசிய நாடுகளில் குறிப்பாக இலங்கை, இந்தியா, நேபாளம் மற்றும் பூட்டான் போன்ற நாடுகளில் குடும்பக் கொள்கை (family policy) என்பது சட்டமாக இல்லை. நீடிக்கப்பட்ட (extended family) அல்லது கொத்தணிக் குடும்ப உறவு (cluster family) முறைமை என்பது கலப்பு திருமணங்களினாலும், நாகரிக மோகத்தினாலும், சேர்ந்து வாழ்தல் அல்லது கூடிக்குடும்பமாக வாழ்தல் மற்றும் விருப்பமின்றேல் பிரிந்து சென்றுவிடல் என்கின்ற பல்வேறு காரணிகளால் சிதைவடைந்து செல்கின்றமை அவதானிக்கத்தக்கது.

இவை திருமணம், பிள்ளை, குடும்பம் என்பதனை நவீனம் என்கின்ற வரையறைக்குள் புதிய அத்தியாயத்தினை ஆரம்பித்து வைத்து விடுகின்றன. இதற்கு உதாரணங்களாக, இரு பெண்கள் ஆண் கொடையாளி மூலமாக குழந்தை ஒன்றை திருமண பந்தமின்றி பெற்றுக் கொள்வது என்பதுவும், தனிநபர் குழந்தையுடன் குடும்பமாக வாழ்வது என்பதுவும் சாத்தியமாகிவிட்டதனைக் கருதலாம். இதன் சட்ட ஏற்பு என்பதற்கு அப்பால் குடும்பம் என்பது ஒரு கொள்கையாக இல்லாத காரணத்தினால் தராதரங்கள் அற்ற, ஆளுகைக்கு உட்படுத்தப்படாத விழுமியங்கள், நியதிகளுக்கு அப்பால் கையாளப்படுகின்ற அலகாக குடும்பம் என்பது திகழ்கின்றது.

மகவேற்பு அல்லாத மாற்று வழிமுறைகளில் பெரும்பான்மையானவை தம்பதிகளின் அல்லது சம்பந்தப்பட்ட அங்கத்தவர்களின் ஒப்புதலுடன் மூன்றாம் தரப்பினரை உள்வாங்கியே பிள்ளைப்பேறு என்பதனை சாத்தியமாக்கி விடுகின்றது என்பது பலருக்கும் தெரிந்திராத சரித்திரம். மகவேற்பு என்பதில் பிள்ளையின் பெற்றோரது சம்மதத்துடனேயே சட்டரீதியாகக் கைமாற்றுதலினைச் செய்கின்றனர். இது சட்டரீதியாக ஏற்கப்பட்ட ஒரு விடயப்பரப்பு. இருப்பினும் அநேகமான மாற்றுவழிமுறைகளில் மரபணு அல்லது விந்தணு மூலமான கருவுறல் செயற்பாடு என்பது விந்து வழங்கும் கொடையாளியின், அல்லது விந்தணுவினைத் தனது கருவில் சுமந்து பிரசவத்தின் பின் பிள்ளையினைக் கையளிக்கும் பெண்ணின் (மனிதத்தின் ஒத்துழைப்பின்) மூலமே சாத்தியமாகின்றது. இம் மூன்றாம் தரப்பு யார் என்பது தம்பதிகளுக்கோ அல்லது எதிர்காலச் சந்ததிக்கோ தெரிந்திருக்க சந்தர்ப்பங்கள் இல்லை. ஏனெனில், ஒப்பந்தங்கள் மூலம் இவை, முகவர்கள் மூலம் தனியார் கம்பனிகளினால் கையாளப்படுகின்றன.

வாடகைத்தாய் தனது கர்ப்பப்பையினை குறிப்பிட்ட பத்து மாத காலத்திற்கு வாடகைக்கு விட்டு, அநேகமாக தனியார் வைத்தியசாலைகளில் வைத்து குழந்தையினை ஒப்பந்தக் கடப்பாடுகளின் அடிப்படையில் கைமாற்றுகின்ற நடைமுறையினைக் கருதுகின்றது. இத்தகைய ஒப்பந்தங்கள் சட்டரீதியாக சவால்களுக்கு



உட்படுத்தக்கூடியவை. மூன்றாம் தரப்பு தனது கடப்பாடுகளினை மீறுகின்ற போது, செயற்படுத்த தவறுகின்ற போது அதிகம் பாதிப்புக்குள்ளாவது தாய்மை எனும் எண்ணக்கருவே. இலங்கை, இந்தியா போன்ற நாடுகளில் வாடகைத்தாய் மற்றும் விந்தணு வழங்கும் கொடையாளிகள் பிள்ளைகளினைப் பின் தொடர்வது, உரிமை கொண்டாடுவது, உரித்துள்ளதாகக் கருதுவது என்பது தடுக்கப்பட்டுள்ளதாகவே ஒப்பந்தங்களில் குறிப்பிடப்பட்டுள்ளன. ஆனாலும், பிள்ளைகளின் எதிர்கால நலன் சட்டரீதியாக நோக்கப்படுமிடத்து பிள்ளையானவர் தான் தனது தாயார் அல்லது பெற்றவர்கள் குறித்த விவரங்களினை அறிய முற்படும் போது சட்டரீதியான சிக்கல்களினை குறித்த அரசுகள் மற்றும் தனியார் துறை எதிர்கொள்ள வேண்டியிருக்கும்.

வளர்முக நாடுகளில் பெண்களின் எண்ணிக்கையினை அதிக சதவீதமாகக் கொண்டிருக்கும் தெற்காசிய நாடுகளில் இந்தியாவில் மட்டுமே வாடகைத்தாய் அல்லது செவிலித்தாய் என்பது சட்டரீதியாக ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளதுடன் உரிய வழிமுறைகளும் பின்பற்றப்படுகின்றன. அதனால் வர்த்தக ரீதியிலான இலாபம் ஈட்டும் நோக்கில் இக்கருப்பொருளினைப் பயன்படுத்தல் தவிர்க்கப்படுகின்றன. ஆனாலும் விதவைகள், தனிப் பெண், பெண்களினை மட்டும் கொண்ட குடும்பம், மூன்றாம் பாலினத்தவர்கள் கூட இம்முறையில் குழந்தைப்பேறு பெற்றவர்களாகி விடுகின்றதான சூழ்நிலை காணப்படுகின்றது. ஆஸ்திரேலியா, நியூசிலாந்து மற்றும் நெதர்லாந்து போன்ற நாடுகளிலும் இதே நிலைமைகளே காணப்படுகின்றன. இருப்பினும் இலங்கையில் இதே நிலைமைகள் சட்டமாக்கப்படவில்லை. குடும்ப அந்தரங்கம் பேணப்படல், உரித்து மற்றும் உறவு தொடர்பான சட்ட தெளிவின்மை, சுயாதீனமாக தனியன்கள் குடும்ப வட்டத்திற்குள் இயங்க இயலாதவரான கட்டமைப்பாக குடும்பம் காணப்படல் போன்ற பல்வேறு காரணங்களினால் சட்டமாக ஆக்கப்படவில்லை.

## பிள்ளைப்பரிமாற்றம் மற்றும் இனப் பெருக்கத்திற்கான சுற்றுலா (Child exchange and Reproductive Tourism)

மேற்படி நிலைமைகள் காரணமாக புதிய மரபணு மற்றும் இனப்பெருக்கத்தொழில்நுட்ப வைத்தியத் துறையில் (New Genetic and Reproductive Technologies-NRGT) பாண்டித்தியம் பெற்ற இந்தியா மற்றும் மேம்பாடு அடைந்த வல்லரசு நாடுகளின் கம்பனிகள் தமது கிளைகளினை இலங்கையிலும், நேபாளத்திலும் அமைத்து வருவதுடன் சமகாலத்தே திறம்பட செயற்பட்டும் வருகின்றன.

மாதாந்தம் அண்ணளவாக 1,380 பேர் வரையில் இம்முறை மூலம் சிசு பெற்றுக் கொள்கின்றனர் என அறிய முடிகின்றது. ஏறத்தாழ பதின்நான்கு பதிவு செய்யப்பட்ட அமைப்புக்களினை இந்தியா, நேபாளம், இலங்கையில் கொண்டிருக்கும் இத்துறை மூலம் கணிசமான அளவு சிறுபிள்ளைகள் உலகிற்கு காலடியெடுத்து வைக்கின்றனர். நாடுகளுக்கு இடையே சட்டரீதியில் காணப்படுகின்ற தளர்வு நிலைமைகளுக்கு அமைவாக தம்பதிகள் நாடுகாண் பயணம் மேற்கொள்ளவும் வேண்டிய ஆலோசனைகள் பதிவு செய்யப்பட்ட அமைப்புக்களின் மூலம் வழங்கப்படுகின்றன. சாதாரணமாகப் பிறநாட்டு வைத்தியர்கள் இன்னொரு நாட்டில் தொழில் செய்வதற்கு உரிமம் (License) பெறவேண்டிய தேவையுள்ள போதும், வைத்திய ஆலோசனை என்கின்ற பெயரில் கம்பனிகள் லண்டன், கனடா, ஆஸ்திரேலியா, அமெரிக்கா போன்ற நாடுகளிலிருந்து வருவிக்கப்படவும் செய்கின்றனர். நாடுகளுக்கு உல்லாசப்பயணிகள் மூலம் கணிசமான வருமானம் ஈட்டப்படுகின்ற காரணத்தினால் இத்தகு செயற்பாடுகள் சட்டநடைமுறை மற்றும் அதிகார தரப்புகளுக்கு (Law and Order) மிகவும் சவாலாகவே உள்ளன.



(மிகுதி நாளை)

# வவுனியாவில் மேலும் மூவர் தொற்றால் சாவு!

(வவுனியா நிருபர்)

வவுனியாவில் மேலும் 49 பேருக்குக் கொரோனாத்தொற்றுஏற்பட்டுள்ளதுடன், மூவர் மரணமடைந்துள்ளனர் என்று சுகாதாரப்பிரிவினர்தெரிவித்துள்ளனர்.

வவுனியாவில் இனங்காணப்பட்ட கொரோனாத் தொற்றாளர்களுடன் தொடர்புகளைப் பேணியோர், வவுனியா வைத்தியசாலையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டோர் மற்றும் எழுமாறாக மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். மற்றும் அன்டிஜன் பரிசோதனையின் முடிவுகள் சில வெளியாகியுள்ளன.

அதில் வவுனியா, வவுனியா வடக்கு, செட்டிகுளம், வவுனியா தெற்கு ஆகிய பிரிவுகளை உள்ளடக்கியதாக மாவட்டம் முழுவதும் கொரோனாத் தொற்று பரவல் அடைந்துள்ள நிலையில் 49 பேருக்குத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இந்நிலையில், தொற்றாளர்களைக் கொரோனா சிகிச்சை நிலையத்துக்கு அனுப்பிவைப்பதற்கும், அவர்களுடன் தொடர்புடையவர்களைத் தனிமைப்படுத்துவதற்கும் சுகாதாரப் பிரிவினர் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

மேலும், கொரோனாத் தொற்றுகாரணமாக வவுனியாவில் நேற்று முன்தினமும் மூவர் மரணமடைந்துள்ளனர்.

# மீண்டும் இரத்த வெள்ளத்தில் நாட்டைத் தள்ளும் சூழ்ச்சி!

## அநுரகுமார வேதனை

தோல்வியடைந்த ஆட்சியாளர்கள் நாட்டில் மீண்டும் ஓர் இனவாதப் பிரச்சினையை ஏற்படுத்த முயற்சிக்கிறார்களாஎன்றசாதாரண சந்தேகம் எழுந்துள்ளது என மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

நாட்டில் இடம்பெற்ற தற்கொலைக் குண்டுத் தாக்குதல்கள் தற்போதைய அரசாங்கம் ஆட்சிக்கு வருவதற்கு மிகவும் உறுதுணையாக அமைந்தது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்கு இவ்வாறான தாக்குதல்களை நடத்தினார்கள் என்பது தொடர்பான சந்தேகம் வலுப்பெற்றுள்ளது.

கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை அது தொடர்பில் குரல் எழுப்பி வருகிறார் என அநுரகுமார திஸாநாயக்க குறிப்பிட்டுள்ளார்.

கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை உள்ளிட்ட கத்தோலிக்க பாதிரியார்கள் மீது சேறு பூசும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என தெரிவித்துள்ள அநுர குமார திசாநாயக்க, சிறிது காலம் தலைமறைவாக இருந்த இன வாத கருத்துக்களை பரப்பும் நபர் கள் தற்போது திடீரென மீண்டும் தோன்றி உள்ளனர் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

முறையாக ஆட்சி செய்ய முடியாமல் தோல்வி அடைந்தவர்கள் அதிலிருந்து தப்பித்துக் கொள்வதற்காக ஏதேனும் இரத்த வெள்ளத்தில் நாட்டைத் தள்ளும் சூழ்ச்சியில் ஈடுபட்டுள்ளனரா என்ற சந்தேகம் எழுந்துள்ளது.

எனவே இந்த விடயம் தொடர்பாக நாட்டு மக்கள் மிகவும் அவதானத்துடன் இருக்க வேண்டுமென அநுரகுமார திஸாநாயக்க கேட்டுக்கொண்டுள்ளார்.

# எல்லை மீறும் ...........

(10ஆம் பக்கத் தொடர்ச்சி)

காடுகளை மனிதன் ஆக்கிரமித்து வருகின்ற போது யானைகள் காட்டை விட்டு இடம்பெயருகின்ற சூழ்நிலைக்கு தள்ளப்படுகின்றன. பல மில்லியன் ரூபா செலவிட்டு காடுகளை அழித்து அபிவிருத்தி எனும் போர்வையில் இலங்கையில் ஏற்படுத்தப்படுகின்ற குறை அபிவிருத்திகளால் இயற்கையும் அதுசார் விலங்குகளும் ஆபத்தான நிலையை எதிர்கொண்டுள்ளமையை பல ஊடகங்கள் விமர்சித்துக் கொண்டுதான் இருக்கின்றன. இருந்தாலும் மென்மேலும் பல அபிவிருத்தித் திட்டங்களை ஊக்குவிக்கின்றார்களே தவிர இந்தப் பிரச்சினைகளுக்கான தீர்வை யாரும் யோசிக்கவில்லை. இயற்கையை மனிதர்கள் சீர்குலைக்கின்ற போது அது எங்களுக்கு எதிராக செயற்படத் தொடங்குகின்றது. மனிதர்கள் யானையின் இருப்புத் தன்மைக்கு இடையூறு விளைவிக்கின்ற போது அவை மனிதர்களின் செயற்பாடுகளில் குறுக்கிடுகின்றன.

அண்மைய காலங்களில் அதிகளவாக ஊடகங்களில் யானைகள் குறித்த செய்திகள் வெளிவந்த வண்ணமே உள்ளன. குறிப்பாக யானைகள் தந்தத்திற்காக கொலை செய்யப்படுகின்றமை இலங்கையைப் பொறுத்தவரை அதிகமாக உள்ளது எனலாம். யானைக்கும் மனிதனுக்கும் இடையிலான மோதல் நாளுக்கு நாள் அதிகரித்த வண்ணம் இருக்கின்ற இந்தச் சந்தர்ப்பத்தில் யானைகளை பாதுகாக்க வேண்டிய பொறுப்பும் மனிதனிடமே ஒப்படைக்கப்பட்டுள்ளது. அந்தவகையில் அவற்றைப் பாதுகாக்கும் விழிப்புணர்வை மக்கள் மத்தியில் உருவாக்கும் விதமாக உலக யானைகள் தினம் வருடந்தோறும் ஓகஸ்ட் 12ஆம் திகதி கடைப்பிடிக்கப்படுகிறது. இலங்கையில் காடுகளில் நிலவுகின்ற பாதுகாப்பற்ற சூழ்நிலைகளால் நாளுக்கு நாள் யானைகளின் எண்ணிக்கை குறைந்து வருகின்ற நிலையில், யானைகளைப் பாதுகாக்கும் வகையில் வனங்களில் இயற்கை வளம் குன்றாமல் பாதுகாப்பது அவசியம் என பன்னாட்டு இயற்கை பாதுகாப்பு நிறுவனம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

எல்லாவற்றையும் கடந்து ஒரு கலாச்சார சின்னமாக யானைகள் சித்தரிக்கப்பட்டு, கொண்டாடப்பட்டு வருகின்ற முறைமை இலங்கையில் வழக்கமாக உள்ளது. பெரஹராக்களிலும், திருவிழாக்களிலும் முதன்மையளிக்கப்பட்டு இவை பூஜிக்கப்பட்டாலும் அவற்றின் பராமரிப்பு எனும் விடயத்தில் மிகவும் மனிதாபிமானமற்ற கதைகள் பல பொதிந்துள்ளன. அண்மையில் கூட இது சார்ந்த பல படங்கள் வெளிக்கொணரப்பட்டு ஊடகங்கள் மத்தியில் பேசுபொருளாகி விமர்சிக்கப்பட்டன. இந்தநிலை மாறப்போவதில்லை. வாயில்லா ஜீவன்கள் என்ன செய்துவிட முடியும் என்கின்ற எண்ணத்தில் அவற்றிற்கான பாதுகாப்பு கேள்விக்குறியாகவே இருந்து விடப்போகின்றது. இவற்றையும் தாண்டி ஒவ்வொரு மனிதனும் சக வன ஜீவராசிகளை தங்களால் முடிந்தளவு பாதுகாக்க முன்வர வேண்டும்.

இலங்கையில் யானைகள் குறித்த பாதுகாப்பு சட்டங்கள் பல உள்ளன. அவை நடைமுறைப்படுத்தப்படுவதாகக் கூட அறிக்கை சமர்ப்பிக்கின்றார்கள். சில தினங்களுக்கு முன்பதாகக் கூட மின்சார வேலிகளில் ரோந்து நடவடிக்கை முன்னெடுக்கப்படும் எனவும், எதிர்காலத்தில் இதற்கென 5,000 புதிய பாதுகாப்பு அதிகாரிகள் நியமிக்கப்படுவார்கள் எனவும் வனஜீவராசிகள் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் குறிப்பிட்டுள்ளார். இது கூட எவ்வளவு தூரம் சாத்தியமென்று தெரியவில்லை. இயற்கையை நாம் தொட்டிச் செடிகளிலும், அலங்காரப் பூக்களிலும் மட்டுமே காண்கின்றோம். இயற்கையைக் காடுகளிடமும், விலங்குகளிடமும் தேடுங்கள், அப்போது சட்டங்களும் தேவைப்படாது, சரணாலயங்களும் அவசியமற்றுப் போய்விடும் என்பதுவே நிதர்சனம்.

# சமுர்த்தி கொடுப்பனவு கிடைக்காதமையால் குச்சவெளி பகுதி மக்கள் அசௌகரியம்

திருகோணமலை – குச்சவெளி பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட கோணேசபுரி பிரதேச மக்களுக்கு அரசாங்கத்தால் வழங்கப்படும் சமுர்த்தி கொடுப்பனவு ஒவ்வொரு மாதமும் கிடைப்பதில்லை எனவும், மூன்று அல்லது நான்கு மாதத்துக்கு ஒரு முறையே இந்தக் கொடுப்பனவு வழங்கப்படுவதாகப் பிரதேச மக்கள் குற்றம் சுமத்தியுள்ளனர்.

இவ்வாறு வழங்கப்படும் சமுர்த்தி கொடுப்பனவை சுமார் 15 கிலோமீற்றர் தூரத்தில் திருகோணமலை நகர்ப்புறத்தில் உள்ள ஜின்னா நகர் காரியாலயத்தில் சென்று பெற்றுக்கொள்ள வேண்டும் எனவும் கோணேசபுரி கிராமத்தில் அமைக்கப்பட்டுள்ள சமுர்த்தி காரியாலயம் சரியாக இயங்குவதில்லை எனவும் பிரதேச மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

நாட்டில் அமுல்படுத்தப்பட்டுள்ள தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டம் காரணமாகக் கூலி தொழிலுக்குக் கூட செல்ல முடியாமல் கஷ்டப்படும் கோணேசபுரி மக்கள் அரசாங்கத்தால் வழங்கப்படும் சமுர்த்தி கொடுப்பனவை உரிய நேரத்தில் வழங்குமாறு உரிய அதிகாரிகளுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

# சுகாதார வழிகாட்டல்களை மறந்தால் மீண்டும் ஆபத்து!

## விசேட வைத்திய நிபுணர் பிரசன்ன குணசேன எச்சரிக்கை



கொரோனா வைரஸ் பரவல் தற்போது ஓரளவு கட்டுப்படுத்தப்பட்டுள்ள நிலையில் மக்கள் சுகாதார வழிமுறைகளைத் தொடர்ந்தும் முறையாக பின்பற்ற வேண்டும். அவ்வாறு மக்கள் அதனைப் பின்பற்றாவிட்டால் மிக மோசமான விளைவுகளை மீண்டும் எதிர்கொள்ள நேரிடும் என அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனத்தின் தலைவரும் விசேட வைத்திய நிபுணருமான பிரசன்ன குணசேன எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறியவை வருமாறு –

முகக்கவசம் அணிதல், அடிக்கடி கைகளைக் கழுவுதல், சமூக இடைவெளியைப் பேணுதல் மற்றும் பொதுப்போக்குவரத்துகளை முடிந்தளவு தவிர்த்தல் உள்ளிட்ட சுகாதார வழிமுறைகளை நாட்டு மக்கள் தொடர்ந்தும் பின்பற்ற வேண்டும்.

பாடசாலைகளைத் திறப்பதற்கு கவனம் செலுத்தப்பட்டு வரும் நிலையில் இவ்வாறு மக்கள் பொறுப்புடன் செயற்பட்டால் மாத்திரமே பாடசாலைகளைத் திறக்க முடியும்.

அநேக வர்த்தக நிறுவனங்களுக்கு முன்பாகச் செய்யப்பட்டிருந்த கை கழுவுவதற்கான தண்ணீர் வசதிகள் தற்போது இல்லாதொழிக்கப்பட்டுள்ளன. அவ்வாறு அதற்கான ஏற்பாடுகள் காணப்பட்டாலும் அங்கு தண்ணீர் தடைப்பட்டுள்ளதையும் காண முடிகின்றது.

அதேவேளை, பல்வேறு கட்டுக்கதைகளை நம்பி சிலர் தடுப்பூசிகளைப் பெற்றுக்கொள்ளாமல் உள்ளமை தெரியவருகிறது. எனவே, தடுப்பூசியைப் பெற்றுக் கொள்ளுமாறு கோரிக்கை விடுக்கின்றோம் என்றும் தெரிவித்துள்ளார்.

# இலங்கைக்கு விஜயம் மேற்கொள்ளவுள்ள ஜேர்மனின் இரண்டு இராணுவ அதிகாரிகள்

இலங்கைக்கு பொறுப்பான, ஜேர்மனின் இரண்டு இராணுவ அதிகாரிகள், (கப்டன் ஜெரால்ட் கோச் மற்றும் லெப்.கேணல் ஜோன் சிஹார்) ஆகியோர் நாளை (ஞாயிற்றுக்கிழமை) இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளனர் என ஜேர்மன் தூதரகம் தெரிவித்துள்ளது.

இதன்போது நாளை தொடக்கம் 8 ஆம் திகதி வரை இவர்கள் இலங்கைக்கு விஜயம் செய்து தங்கியிருக்கவுள்ளனர் என ஜேர்மன் தூதரகம் தெரிவித்துள்ளது.

18 மாதங்களுக்கும் மேலாக தொற்றுநோய் தொடர்பான பயணக் கட்டுப்பாடுகளுக்குப் பின்னர், இலங்கை பாதுகாப்பு அமைச்சகத்துக்கும், ஏனைய நாட்டு பாதுகாப்பு அதிகாரிகளுக்கும் இடையிலான தொடர்புகள் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இந்த நிலையில், ஜேர்மன் இராணுவ அதிகாரிகளின் இந்த வருகையின் முக்கிய நோக்கங்களில் ஒன்று 2022 ஜனவரி 9 முதல் 13 வரை, ஜேர்மனிய போர்க் கப்பலான 'பேயரின்' இலங்கைக்கான வருகைக்கான திட்டத்தை தயாரிப்பதாகும் என்று ஜேர்மனியத் தூதரகம் தெரிவித்துள்ளது.

ஆசியாவுக்கான பயணத்தை 2021 ஒகஸ்ட்டில் ஆரம்பித்த, ஜேர்மனிய போர்க்கப்பல், 2022 பெப்ரவரியில் நாடு திரும்பவுள்ளது. 'பேயர்ன்' என்ற கப்பல் கொழும்புக்கு வரும் நிலையில், 2022 ஆம் ஆண்டு ஜனவரியில், இலங்கை கடற்படையுடன் கடலில் கூட்டுப் பயிற்சிகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

# சிறுவர் தினம் கறுப்புத் தினமே!

## காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் ஐ.நா. அலுவலகத்துக்கு முன் போராட்டம்






**(எஸ்.நிதர்ஷன், இ.கலையமுதன்)**

**யாழ்ப்பாணம், ஒக். 02**

**வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள், ஐக்கிய நாடுகள் உயர்ஸ்தானிகரின் யாழ்ப்பாணம் பிராந்திய அலுவலகத்துக்கு முன்னால் கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.**

சர்வதேச சிறுவர் தினத்தையொட்டி, நேற்று முற்பகல் இந்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது. இதன்போது அண்மையில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, ஐக்கிய நாடுகள் பொதுச் சபையில் தெரிவித்த கருத்துக்கள் தொடர்பில் பல்வேறு கோஷங்களை எழுப்பியவாறு அவர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

சிறுவர்கள் பலர் காணாமல்போயுள்ள நிலையில், இந்தச் சிறுவர் தினம் கறுப்புத் தினமே என்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவித்தனர். இந்தக் கவனவீர்ப்புப் போராட்டம் இடம்பெற்ற இடத்துக்கு வெளியே அரச புலனாய்வாளர்கள் குவிக்கப்பட்டு கண்காணிப்பில் ஈடுபட்டிருந்தனர் என்பது அவதானிக்கப்பட்டது.

# 41 நாள்களின் பின்னர் திறக்கப்பட்ட இலங்கை!

## அரச, தனியார் பஸ்கள் மாகாணங்களுக்குள் சேவையில்



இலங்கையில் அமுல்படுத்தப்பட்டிருந்த தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டம் நேற்று அதிகாலை 4 மணி முதல் தளர்த்தப்பட்டுள்ளது.

எனினும், மாகாணங்களுக்கு இடையிலான பயணக் கட்டுப்பாடு அவ்வாறே தொடரும் என்பதுடன், நாடு முழுவதும் இரவு 10 மணி முதல் அதிகாலை 4 மணி வரையில் தினமும் பயணக் கட்டுப்பாடு அமுலில் இருக்கும்.

கொரோனாத் தொற்று நிலைமையைக் கருத்தில்கொண்டு கடந்த ஓகஸ்ட் மாதம் 21ஆம் திகதி முதல் நாடு முழுவதும் ஊரடங்கு அமுல்படுத்தப்பட்டது.

இந்நிலையில் தற்போது கொரோனாத் தொற்றுப் பரவல் நிலைமை சற்று குறைவடைந்துள்ளதால், நேற்று முதல் நாட்டை இறுக்கமான கட்டுப்பாடுகளுடன் திறப்பதற்கு அரசு நடவடிக்கை எடுத்தது.

நாட்டைத்திறந்தாலும் ஒன்றுகூடல்கள், கூட்டங்கள் உள்ளிட்ட பல விடயங்களுக்குத் தொடர்ந்தும் கட்டுப்பாடு அமுல்படுத்தப்பட்டுள்ளது.

ஊரடங்கு தளர்த்தப்பட்டுள்ள காலப் பகுதியில் சுகாதார ஒழுங்குவிதிகளைப் பின்பற்றி நடந்துகொள்ளுமாறு அதிகாரிகள் மக்களைக் கேட்டுக்கொண்டுள்ளனர்.

இதேவேளை, இலங்கை போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பஸ்கள் மற்றும் தனியார் பஸ்கள் என்பவை நேற்று காலை முதல் சுகாதார வழிமுறைகளுக்கு அமைவாக மாகாணங்களுக்குள் சேவையில் ஈடுபடுகின்றன.

### ஜி.எஸ்.பி.பிளஸ்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இன்னொருபுறம் இலங்கை ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்ஷ ஐ.நாவில் காணாமல்போனவர்களுக்கு மரணச் சான்றிதழ் வழங்குவதாக தெரிவித்துள்ளார்.

மரணச் சான்றிதழ் வழங்குவதற்கு எமது உறவுகள் காணாமல்போனவர்கள் அல்லர்; காணாமல் ஆக்கப்பட்டவர்கள். இதனை சர்வதேசம் நன்கு உணர வேண்டும்.

மரணச் சான்றிதழ் வழங்குவதற்கு ஜனாதிபதி நடவடிக்கை எடுப்பதாகத் தெரிவித்த நிலையில் நமது உறவுகளுக்கு என்ன நடந்தது என்பதை அவர் முதலில் தெளிவுபடுத்த வேண்டும்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் தமிழர்களின் விவசாய பூமி பெரும்பான்மை இனத்தவர்களால் அபகரிப்பு செய்யப்படுகின்ற நிலையில் தமிழ் மக்கள் உண்ண வழியின்றி தமது நிலங்களை இழந்த நிலையில் காணப்படுகின்றனர்.

1984ஆம் ஆண்டு முதல் தற்போது வரை தமிழ் மக்கள் தொடர்ந்தும் அகதி வாழ்க்கை நடாத்திவரும் நிலையில் அரசாங்கமானது தீர்க்கமான முடிவொன்றை மக்களுக்கு வழங்க வேண்டும்.

மன்னார் மாவட்டத்தில் மீனவ மக்களின் வாழ்விடங்கள் மற்றும் அவர்களின் தொழில் துறைகளை கடற்படையினர் இன்னும் விடுவிக்காமல் தமது கட்டுப்பாட்டில் வைத்துள்ளனர்.

தமிழ் மக்களின் மீன்வளத்தை தென்னிலங்கையைச் சேர்ந்தவர்கள் அனுபவித்து வரும் நிலையில் இதனை நம்பி கடற் தொழிலில் ஈடுபட்டவர்கள் மாற்றுத் தொழிலை செய்ய வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளது.

யாழ். மாவட்டத்தில் வலிகாமம் வடக்கு பிரதேசத்தில் அண்மையில் விடுவிக்கப்பட்ட பொது மக்களின் 3500 ஏக்கர் காணிகளில் சுமார் 500 ஏக்கர் காணிகள் தொடர்ந்தும் பாதுகாப்பு தரப்பினரின் பயன்பாட்டில் உள்ளன.

மேலும், வடக்கில் சிறந்த விளைச்சலைத் தரக்கூடிய 2 ஆயிரம் ஏக்கர் வளமான விவசாய காணிகள் தொடர்ந்தும் இராணுவத்தின் கட்டுப்பாட்டில் விடுவிக்கப்படாமல் உள்ளன.

இவ்வாறான நிலையில் இலங்கை அரசுக்கு ஜி.எஸ்.பி. வரிச்சலுகையை ஐரோப்பிய ஒன்றியம் வழங்குவதற்கு முன்னர் குறித்த விடயங்கள் தொடர்பில் கவனத்தில்கொள்ள வேண்டும் என்று அவர்கள் கோரிக்கை விடுத்தனர்.

ஊடக சந்திப்பில் காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் பிரதிநிதிகள், வலிகாமம் வடக்கு மீள்குடியேற்றம் புனரமைப்பு சங்கத் தலைவர், கடற்றொழிலாளர் சம்மேளனத்தின் செயலாளர், மாதர் சங்க உறுப்பினர்கள், பிரதேச சபை உறுப்பினர்கள், சட்டத்தரணி எனப் பலரும் கலந்துகொண்டனர்.

### 5 மாவட்டங்களுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

காலி, களுத்துறை, கண்டி, கேகாலை மற்றும் இரத்தினபுரி ஆகிய மாவட்டங்களின் சில பிரதேசங்களுக்கே இவ்வாறு மண் சரிவு முன்னெச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அதேவேளை, நாட்டில் பல பாகங்களிலும் நேற்றுக் காலை முதல் மழை பெய்து வருகின்றது.

# இலங்கை மீது 240 பேர் முன்வைத்த குற்றச்சாட்டுக்கள் ஆவணப்படுத்தல்

## ஐ.நா. பொதுச் செயலாளர் அதிரடி



இலங்கைக்கு எதிரான குற்றச்சாட்டுக்களை ஐ.நா. பொதுச் செயலாளர் அன்டோனியோ குட்டெரெஸ் ஆவணப்படுத்தியுள்ளார்.

இலங்கைக்கு எதிராக 45 நாடுகளில் வசிக்கும் சிவில் அமைப்புகளின் உறுப்பினர் கள், சிவில் செயற்பாட்டாளர்கள் மற்றும் ஊடகவியலாளர்கள் என 240 பேர் முன் வைத்துள்ள குற்றச்சாட் டுக்களையே ஐ.நா. பொதுச் செயலாளர் ஆவணப்படுத்தியுள்ளார்.

பழிவாங்கல் மற்றும் அச்சுறுத்தல் குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக ஆவணப்படுத்தப்பட்ட அறிக்கையை மனித உரிமைகளுக் கான ஐ.நா. உதவிச் செயலாளர் பிராண்ட்ஸ் கெஹ்ரிஸ், ஐ.நா. மனித உரிமைகள் சபைக் குச் சமர்ப்பித்துள்ளார்.

இதில் பழிவாங்கல் தொடர்பான குற்றச்சாட்டுக்களே அதிகமாக உள்ளன எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், இலங்கையில் மனித உரிமை பாதுகாவலர்கள், சட்டத்தரணிகள், ஊடகவியலாளர்கள், சமூக செயற்பாட்டா ளர்கள் மற்றும் அவர்களது குடும்ப உறுப் பினர்கள் மீதான பழிவாங்கல்களையும் அச்சுறுத்தல்களையும் கண்காணிப்புக ளையும் முடிவுக்குக் கொண்டுவர வேண்டும் என்று ஐ.நா. மனித உரிமைகள் சபை வலியுறுத்தியுள்ளது.

# அனலைதீவிலும் மஞ்சள் மீட்பு

**(எஸ்.நிதர்ஷன்)**

யாழ்., அனலைதீவில் வீடொன்றில் 20 மஞ்சள் மூடை கள் பதுக்கிவைக்கப்பட்டிருந்த நிலையில் கைப்பற்றப்பட் டுள்ளன என்று கடற்படை தெரிவித்துள்ளது.

அதனைப் பதுக்கி வைத்திருந்தனர் என்ற குற்றச்சாட்டில் இருவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இந்தக் கைது நடவடிக்கை நேற்று அதிகாலை 3 மணிக்கு முன்னெடுக்கப்பட்டது என்று கடற்படை குறிப்பிட்டது.

நாவற்குழி மற்றும் அனலைதீவு ஆகிய இடங்களைச் சேர்ந்த இருவரே கைதுசெய்யப்பட்டுள்ளனர்.